1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு மாசி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 5-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### கொழும்பு அதிமேற்றிராணியார்

பர்மாவிலே றங்கூண் நகரில் இம்மாதம் 2-ந்திகதிமுதல் 5-ந்திகதிவரையில் நடந்தேறவிருக்கின்ற தேசிய சற்பிரசாத மகாநாட்டுக்குச் சமுகமளிக்கும்படியாகக் கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே ஆண்டவர் அவர்கள் சென்ற 31-ந்திகதி செவ்வாயன்று அங்குசென்றிருக்கின்றார். அவர் வருகிற 10-ந் திகதி வெள்ளிக்கிழமை மறுபடியும் வந்துசேருகிறவரையிலே அதிமேற்றிராசன பரிபாலனராக விக்கார் ஜெனறலாகிய மிகவண. ஏ. செறு சுவாமியவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### மாலைத் திவ்வியபூசை

கொழும்பு நகரிலுள்ள தொழிலாளருக்கென நாளை 3-ந்திகதியாகிய மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை மாலை 5-15 மணிக்குப் புறக் கோட்டையிலுள்ள அர்ச். பிலிப்புநேரியார் கோவிலிலே ஓர்மாலைப்பூசை நிறைவேறவிருக்கிறது.

### பத்துலட்சம்ரூபா தேர்தல்நிதி

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பத்துலட்சம்ரூபா தேர்தல்நிதியொன்றைச் சேகரிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தக் கட்சி தனது அபேட்சகர்களுக்கெனப் பொதுநிதியொன்றைச் சேகரிக்கத் தொடங்கியிருப்பது இதுவே முதன்முறையாகும். உள்நாட்டு மந்திரியாரின் அனுமதிபெறவேண்டியிருந்ததைமுன்னிட்டு இந்தக்கட்சிக்கென்று பணஞ்சேகரிக்கும்விஷயமாய்க் கொடிப்பெருநாள்ஒன்றை நடத்தவேண்டுமென்ற எண்ணம் இப்போது கைவிடப்பட்டுவிட்டது.

### மந்திரியாரின் எச்சரிக்கை

அன்று கொடகாமாவிலுள்ள தர்மோதய கல்லூரியின் புதியகட்டடத்திறப்புவிழாவிலே உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயக அவர்கள் பேசியவிடத்து: "இலங்கைமக்கள் ஐக்கியப்படாதவர்களாய், இங்குள்ள பல்வேறு சமூகங்களிடையே அமைதியைப் பங்கப்படுத்தும்கருமங்களில் கலந்துகொள்வார்களானல், நாங்கள் பெற்றசுதந்திரம் விரைவிலே இழந்துபோகப்படுமென்று கண்டிப்பாக எச்சரித்திருக்கின்றார்.

### அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டீ போல் தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 5-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சென்சாள்ஸ் கலாசாலைமண்டபத்தில் நடைபெறும். ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. ஜே. எம். சூசைநேசன் சுவாமியவர்கள் அக்கிராசனம் வகிப்பார். அவ்வேளை வண. பி. சூசைப்பிள்ளை சுவாமியவர்கள் "தருமதொண்டு" எனும் விஷயமாய் ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார். பந்தியின் அபிமானிகளும், உபகாரிகளும், பல்வேறு பந்திகளின் அங்கத்தவர்களும அவ்வேளை சமுகமளிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### பவரணை விடுமுறைநாட்கள்

இவ்வருடப் புத்தவிசாகப்பெருநாளுக்கும், அடுத்தவருடப் போசன் விழாவுக்கு மிடையிலுள்ள பவரணை நாட்களையெல்லாம் அரசாங்க விடுமுறைநாட்களாகப் பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயகஅவர்கள் மந்திரிசபைக்குச் சிபாரிசுசெய்திருக்கின்றார். சகல பவரணைநாட்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு விடுமுறைநாட்களாய் இருக்கவேண்டுமென்று முன்பு தாம்சமர்ப்பித்தபிரேரணை தீர்மானிக்கப் படுகிறவரையிலே இந்தச் சிபாரிசை அங்கீகரிக்கவேண்டுமென்று அவர் மந்திரிசபைக்குத் தெரிவித்திருக்கின்றார்.

### இலவச பங்கீட்டரிசிப் பிரேரணை

இலங்கையிலே வருகிற வைகாசி மாதம் புத்தஜயந்திவிழா ஆரம்பமாகும் வாரத்திலே சனங்களுக்குப் பங்கீட்டரிசி — அதாவது கூப்பன் அரிசியை இலவசமாகக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக்கேட்டுப் பதுளைப்பட்டினசங்கம் ஏகமனதாக ஓர் பிரேரணையை அரங்கேற்றியிருக்கிறது.

### சனப்பிரதிநிதிகள் சபை

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபைகலைக்கப்படுமுன் நிகழும் மாசிமாதம்10-ந்திகதி வெள்ளிக்கிழமை அது கடைசிமுறையாகக் கூடுமெனத்தெரியவருகிறது. பாராளுமன்றத் தேர்தல் ஒழுங்கு அமைப்பிலே செய்யப்பட்டுள்ள திருத்தமுட்பட ஒருதொகையான புதியசட்டங்களை அரங்கேற்றுவதற்காகச் செனற்சபை இம்மாதம் 14-ம், 15-ந் திகதிகளில் கூடும்போவிருக்கிறது.

### காங்கேசன்துறைப் பிரதிநிதி

சனப்பிரதிநிதிகள் சபையிலே காங்கேசன்துறைப் பிரதிநிதியான திரு. எஸ். நடேசன் அவர்கள் மந்திரிசபையிலிருந்தும், ஐக்கியதேசியக் கட்சியிலிருந்தும் தமது பதவிகளை இராசினாமாச்செய்தபின் முதன்முறையாகச் சென்றசனிக்கிழமை தனது பாரியார் சமேதராக விமானமூலம் தமது தொகுதி வந்துசேர்ந்தபோது பெருந்திரளானோர் விமானநிலையத்தில் காத்திருந்து அவருக்கு ஓர் மகத்தான வரவேற்பு அளித்தார்கள். அவ்வேளை திரு. நடேசன் அவர்கள் பேசியபோது: தமிழ்ப் பேசும்மக்கள் தங்கள்உரிமைகளுக்காக ஒரேகுரலாய்க் கிளர்ச்சிசெய்யவேண்டும்; இந்தநோக்கமாக ஒற்றுமை மிக முக்கியமாகுமெனக் கூறலாயினர்.

### புதிய சீனித்தொழிற்சாலை

வடமத்திய மாகாணத்திலே கிறித்தலைஎனுமிடத்தில் சீனித்தொழிற்சாலை ஒன்று ஸ்தாபிப்பதைப் பிரத்தியேக கம்பெனிஒன்றிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தச் சீனித் தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்பைச் செய்கைபண்ணுதற்கென்று குறிக்கப்பட்டஆறுயிரம்ஏக்கர்நிலத்தைச் சமீபத்திலே காணி-காணிஅபிவிருத்தி மந்திரியார் திரு. புலங்குலம திசாவஅவர்கள் அக்கம்பெனியின் எஞ்சினியருடன்சென்று பார்வையிட்டிருக்கின்றார். இந்த ஆறுயிரம் ஏக்கர் நிலமும் இந்தக்கம்பெனியாலே விலைக்கு வாங்கப்பட்டுக் கரும்புசெய்கைபண்ணுமாறு கிராமவாசிகளுக்குப்பகிர்ந்து கொடுக்கப்படும்.

### தேர்தல் இடாப்புகள்

வரப்போகும் பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் இடாப்புகளெல்லாம் தயாராகிவிட்டன. குறித்தகால எல்லைக்குப் பதினைந்துதினங்களுக்கு முன்னதாகவே தயாராகியிருக்கும் இந்த இடாப்புகள் ஆங்கிலம், தமிழ், சிங்களமாகிய மூன்றுபாஷைகளிலும் வாக்காளர்களின் பார்வைக்கு இம்மாதத்தில் கிடைக்கக்கூடியனவாயிருக்கும்.

### உலகசமாதான மாளிகை

உலக சமாதானத்தின் சர்வதேச மாளிகைஒன்று கண்டிநகரில் அமைக்கப்படும்; அதிலேஉலகசமாதானத்துக்கான இயக்கம்ஒன்று ஆரம்பிக்கப்படுமென்று உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயகஅவர்கள் சென்றவெள்ளிக்கிழமை கண்டிநகர ஆஸ்தானமண்டபத்தில் நிகழ்ந்த ஓர் வைபவத்தின்போது தெரிவித்திருக்கின்றார். இந்த மாளிகை உலகசமாதான மகாநாடுகள் கூடுமிடமாக விளங்குமென அவ்வேளை அவர் கூறலாயினர்.

### சங். துளோட் மரியே பிறதர்

இலங்கையிலே கல்வித்தொண்டாற்றி வருகின்ற கிறிஸ்தியன்சபைடபிறதர்மாருள் ஒருவரும், கொழும்பிலுள்ள சென் பெனடிற் கல்லூரியின் முன்னைநாள் அதிபராயிருந்து பலராலும் நன்கறியப்பெற்றவருமான சங். துளோட் மரியேபிறதர் தமது சந்நியாசவாழ்க்கையின் 60-ம் ஆண்டு வைரயூபிலியை மாசிமாதம் 2-ந்திகதியாகிய இன்று தினம் கொண்டாடுகின்றார். இவர் 1923-ம் ஆண்டு இலங்கைவந்துசேர்ந்து, அவ்வருடமுதல் 1931-ம் ஆண்டு வரையிலே சென் பெனடிற் கல்லூரி அதிபராய் விளங்கியிருந்தார். இவர் தற்போது இளைப்பாறியிருந்த போதிலும் தமதுஆலோசனையால் சங். பிறதர் தரிசகர் அவர்களின் பாரமானகடமையை இலகுவாக்குவதிலும், பொருளாதார நிர்வாகத்தின்ஓர்பகுதியைப் பொறுப்பேற்று நடத்துவதிலும் கருத்தாயிருந்துவருகின்றார்.

### காலித்தொகுதி அபேட்சகர்

சனப்பிரதிநிதிகள் சபையிலே காலிப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரும், அகிலஇலங்கைச் சிங்களபர்ஷா பெராமுனையின் இணைத்தலைவருமான திரு. டபிள்யு. தஹநாயகஎன்பவருடன் அடுத்த பொதுத்தேர்தலிலே காலி மோட்டார்பஸ்கம்பெனியின் நிர்வாக தலைவரான திரு. டபிள்யு. டி. எஸ். அபெகுணவர்த்தனஅவர்கள் ஐக்கிய தேசீயகட்சி அபேட்சகராய்ப் போட்டியிடவிருக்கின்றார். இவரை அபேட்சகராகத் தெரிவுசெய்யுமாறு சென்ற சனிக்கிழமை காலிமுற்றவெளியில் நிகழ்ந்தகூட்டத்திலே, திரு. தஹநாயக காலிஸ்தானத்திலே மிகநீண்டகாலம் இருந்துவிட்டார்; இனிஅவரைக் கழற்றவேண்டுமெனப் பேசப்பட்டது.

### பிரசாஉரிமைபெற்ற வாக்காளர்கள்

தற்போதைய திட்டப்படி, இந்தியா-பாகிஸ்தானிய பிரசாஉரிமைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பெற்றுள்ள வாக்காளர்கள் அடுத்துவரப்போகும் பொதுத் தேர்தலிலே சனப்பிரதிநிதிகள் சபைக்கு நான்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யுமாறு தனித்தனியே ஒவ்வொருவரும் நான்குவாக்குச்சீட்டுகள் வழங்கப்படுவார்கள்.

### கான்சருக்குப் புதியமருந்து

கான்சர்எனப்படும் புற்றுநோய்ச் சிகிச்சைக்கெனப் புதிதாகக் கண்டுபிடித்துத் தயாரிக்கப்பெற்ற "சர்க்கோமிஸின் பன்யு" எனும் மருந்து தற்போது இலங்கையிலும் தருவிக்கப்பட்டிருக்கிறது. இது ஒருபவுடராகும். தண்ணீரில் கரையத்தக்கது. ஊசிமருந்தாக உபயோகிக்கப்படத் தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்மேல் உத்தரியம்

(சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ்—மலாயா)

"யார் இத்திரு உத்தரியத்தை அணிந்துகொண்டு மரிக்கிறார்களோ அவர்களை நரகஅக்கினியில் விழாமல் காப்பாற்றுவேன்" என்பதே கார்மேல் உத்தரியநாயகி அளித்த முதல் வாக்குத்தத்தமாகும். இதற்குநாம் செய்ய வேண்டியதுஎன்ன? உத்தரியச்சபையில் பெயரைப்பதிவித்து, ஓர்குருவானவர்மூலம் முறைப்படி உத்தரியம் தரித்து, அதற்குரியகடமைகளைச் சுமுத்திரையாய் அனுசரித்துவரவேண்டும். அதனால் உத்தரியம் மோட்சவாசலுள் பிரவேசிக்கும் பொருட்டு மாதாவால் வழங்கப்பெற்ற ஓர் "மோட்ச பிரவேசச்சீட்டு" எனலாம். ஆகவே, ஒருவரின்மரணம் நன்மரணமோ, துர்மரணமோ என்பதை உத்தரியப்பத்தியைக்கொண்டு நன்றாக அறிந்துகொள்ளலாம். இது மரணித்தஒருவரது ஆத்துமத்தின் மறுலோக நிலைமையாது? — அதாவது மோட்சமோ, நரகமோ என்பதைக் காண்பிக்கும் உரைகல். ஆகவே, உத்தரியப்பக்தியை அனுசரித்துவந்து மரணிக்கும்ஒருவர் திருச்சபையின் ஆறுதல்களைப்பெற்று — அதாவது, பாவசங்கீர்த்தனம், திவ்வியநன்மை, அவஸ்தைப்பூசுதல்என்னும் தேவதிரவியானுமானங்களைப்பெற்று மனப்பாக்கியமாய், மனச்சமாதானமாய் மாணிக்க மாதா உதவிசெய்தருளுவார்.

கார்மேல் உத்தரியநாயகியின் இரண்டாவது வாக்குத்தத்தம் என்ன? "யார் சிவபரியந்தம் இத்திருஉத்தரியத்தை அணிந்துகொண்டு பக்தியாய் நடந்து மரிக்கிறார்களோ, அவர்களை நாம் உத்தரிப்புஸ்தலத்தின் அக்கினிச் சுவாலையிலிருந்து அவர்கள் மரித்த அடுத்தசனிக்கிழமை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டு போவோம்" என்பதே. ஆகவே, இந்தப்பாக்கியத்தை நாம் பெறவேண்டுமானால், (1) அர்ச். இசிதோரைப்போல எப்பொழுதும் நெஞ்சிலே உத்தரியத்தை அணிந்த வண்ணம் இருக்கவேண்டும். (2) எப்பொழுதும் நமது அந்தஸ்துக்கேற்ற வகையிலே கற்பைக்காத்து நடக்க வேண்டும். (3) புதன், சனியாகிய இரண்டுதினங்களிலும் மாமிசம்புசிக்கலாகாது. எக்காரணத்தையிட்டும் அவ்வாறு மாமிசம்புசிக்காதிருக்க முடியாதவர்கள் அதற்குப்பதில் தினமும் தேவமாதாவின் 7 வியாகுலங்களையும், 7 சந்தோஷங்களையுங்குறித்து 7 பரமண்டலமந்திரமும், 7 பிரியதத்தமந்திரமும், 7 திரித்துவஸ்தோத்திரமும் சொல்லிவரவேண்டும். அத்துடன் வருடத்தில்வரும் எல்லாச் சுத்தபோசன், ஒருசந்திநாட்களையும் அனுசரித்துவரவேண்டும். உத்தரியப்பக்திக்குரியகட்டுப்பாடு இம்மட்டுந்தான்.

இந்தஒழுங்குகளை அனுசரித்துநடக்கிறவர்கள் உத்தரியம் அணிந்தபடியே மரித்தால், அவர்கள்மரித்த அடுத்த சனிக்கிழமை நேரே மோட்சம்போய்ச் சேர்வார்கள் — அதாவது, தாம்வாக்குப்பண்ணியபடியே உத்தரியமாதா உத்தரிப்புஸ்தலஞ்சென்று அந்தஆத்துமத்தை – ஆத்துமங்களை அழைத்துக் கொண்டுபோய் மோட்சகரை சேர்ப்பார். பரலோகம்சேர எத்துணை சுருக்கமான வழியை — குறுக்குப் பாதையை மாதா எங்கட்குக் காண்பித்திருக்கிறு. இதன்படி ஒருவர் சனிக்கிழமைமரித்தால், அன்றுதானே அவர் உத்தரிப்புக்கடனைத் தீர்த்து மோட்சம் செல்வார்என்பது சொல்லாமலேவிளங்கும். ஆகவே, நாம் எப்பொழுதும் திரு உத்தரியப்பக்தியை உத்தமவிதமாய் அனுசரித்துவந்து ஓர் சனிக்கிழமை சாகும்வரத்தையே கார்மேல் உத்தரியநாயகியிடம் கேட்டுவரமறவாதிருப்போமாக!

நிற்க, நரகத்தினின்று தப்பிக்கொள்வதற்காக — மரித்தபின்வரும் அடுத்த சனிக்கிழமை உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து மோட்சம்போய்ச் சேரத்தக்கதாகச் சிவபரியந்தம் உத்தரியப்பக்தியை அனுசரித்துவருவது அவசியமெனக்கண்டோம். அதனால், கூடியவரை எல்லோரும் உத்தரியம்பெற்று, அதன்கடமைகளை நிறைவேற்றி வருவார்களாக! பெற்றோர் தங்கள்பிள்ளைகள் முதல்நன்மைபெறும் தினமன்றே திருஉத்தரியத்தை அவர்கட்குத்தரிப்பித்து, கூட்டத்திலும் அவர்கள்பெயரைப் பதிவுசெய்வித்துக் கொள்ள வேண்டும். பின்னர்அவர்கள் எப்பொழுதும் உத்தரியம் தரித்தவண்ணம் இருக்கிறார்களா? அதற்குரியகடமைகளை நிறைவேற்றிவருகிறார்களா? என்பதைக் கவனித்துவரவேண்டும். சிறியோரும், பெரியோருமாய்ப் பலசமயங்களில் நீராடும்போது, தாங்கள் தரித்திருக்கும்உத்தரியம் நனையாதபடி — அவ்விதம்நனைந்து உக்கிப்போகாதபடி பத்திரம்பண்ணுவதற்காக அதைக் கழற்றிவைப்பது ஆபத்தாகும். இவ்விதம் கழற்றி விட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டுச் சிவமோசமுண்டாகுமானல்...... அதனுல், நீராடும் போதோ, நித்திரைசெய்யும்போதோ, வேலைசெய்யும்போதோ, விளையாடும் போதோ உத்தரியம் கழுத்தில்இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். மாதாவின் இரட்சணியகேடயமாகிய திருஉத்தரியம் நமக்குப்பாதுகாப்பாக எப்போதுமே இருந்துவரப் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்போது மாதா தமதுபோர்வையால் நம்மை மூடி மறைத்து ஓர்நாள் மோட்சகரை கொண்டுபோய்ச் சேர்ப்பார் என்பது திண்ணம்!

உத்தரியகூட்டத்தில் ஒருமுறை பெயர்பதிந்து குருவானவர்கையால் ஆசீர்வதிப்பித்து உத்தரியம் அணிந்தாற்போதும். அதன்பின் உத்தரியத்தை ஆசீர்வதிப்பிக்க வேண்டியதில்லை. உத்தரியம் அற அற, வேறு புதுஉத்தரியத்தை வாங்கி ஆசீர்வதிப்பியாமலே கழுத்தில்அணியலாம். உத்தரியத்துக்குப்பதில் உத்தரியப் பாவணிக்கமும் உண்டு. உத்தரியப் பாவணிக்கத்தை ஆசீர்வதிப்பித்தே அணியவேண்டும். அதாவது, இழந்துபோன ஓர்பாவணிக்கத்துக்காக மற்றோர்பாவணிக்கத்தைவாங்கி அணியும்போது அதைக் குருவானவரிடம் கொடுத்து ஆசீர்வதிப்பித்தே அணிய வேண்டும். அன்றேல் அதில் பலனில்லை.

# அரசியல் வானம்

எதிர்க்கட்சியைச்சேர்ந்த அரசியற் கட்சிகள் தங்களிடையே செய்துள்ள ஓர்பொருத்தனைப்படி, அடுத்துவரும் பொதுத்தேர்தலிலே அக்கட்சிகளைச் சேர்ந்த எவருமே சனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரான சேர் அல்பேட் பீரிஸ்அவர்களின் ஸ்தானத்துக்கு —அதாவது நாத்தாண்டியா ஸ்தானத்துக்குப் போட்டியிடமாட்டார்கள். ஆயினும், சென்றபொதுத்தேர்தலிலே அவருடன் போட்டியிட்ட அதே அபேட்சகரான திரு. ஹியு பெர்ணண்டோஅவர்கள் ஓர் சுயேச்சை அபேட்சகராக இம்முறையும் போட்டியிடவிருக்கின்றார். ஸ்தானத்துக்குத் தங்கள் அபேட்சகர் எவரையும் நிறுத்துவதில்லையென்று ஏற்கனவே தீர்மானித்துவிடவில்லையின.

## திரும்பவும் பிரதமராக

அடுத்துநிகழும்பொதுத்தேர்தலிலே அக்குறெசஸ்தானத்துக்கு ஐக்கியதேசீயக்கட்சி அபேட்சகரைஆதரிப்பதாலே நான்திரும்பவும் பிரதமராகவருவதற்கு நீங்கள் உதவிசெய்வோர் ஆவீர்கள்; அத்தேர்தலிலே அக்குறெசஸ்தானத்துக்குப் போட்டியிடும் கம்யூனிஸ்த அபேட்சகரைத் தோற்கடிக்கத்தக்கதாய் உங்கள் ஒத்தாசையை நாடிநிற்கின்றேன்; அவரைத்தோற்கடித்தால் நான் புத்தசமயத்தையும், சிங்கள பாஷையையும், கலாசாரத்தையும் முன்னேற்றக்கூடிய ஓர்நிலைமைக்குள்ளாயிருப்பேன்என்று பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் அக்குறெசையில் நடைபெற்ற ஓர்பகிரங்கக்கூட்டத்தில் பேசியிருக்கின்றார்.

## இலகுவான கருமம்அல்ல

சனப்பிரதிநிதிகள் சபையிலே களனிப்பிரதிநிதியும், உணவு-கமத்தொழில் மந்திரியாருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் அன்று களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது: 1947-ம் ஆண்டுமுதல் நான் வகித்திருக்கும் களனி ஸ்தானத்தை அடுத்த பொதுத்தேர்தலிலும் வெற்றிகொள்வேனென நம்புகிறேன்; மற்றொருவர்வந்து போட்டியிட்டு என்னை வெளியேற்றுவது இலகுவானகருமம் அல்லஎனக் கூறலாயினர். தம்பதேனியாப் பிரதிநிதியான திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்களே இவருடன் களனிஸ்தானத்திற்குப் போட்டியிட முன்வந்திருக்கின்றார்.

## எதிர்க்கட்சிகளின் ஆதரவு

உணவு – கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களை வரவிருக்கும் பொதுத்தேர்தலில் தோற்கடிக்கும் முயற்சியிலே சனப்பிரதிநிதிகள்சபையின் சகலமான எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்களை ஆதரிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகஉட்பட அக்கட்சியைச் சேர்ந்தஅங்கத்தவர்கள் திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்களுக்கு வாக்குகள் சேர்க்க ஏற்கனவே தொடங்கிவிட்டார்கள். ஐக்கியதேசீயக்கட்சியை எதிர்த்துத் திரு. ஆர். ஜி. அவர்கள் களனிஸ்தானத்துக்கு ஓர் அபேட்சகராகவரவிருக்கிறாரென்ற செய்திபரந்தது முதல் அக்கட்சியும், லங்கா சமசமாஜ கட்சியும், கம்யூனிஸ்தகட்சியும் அந்த

## தொழிற்கட்சி பிரிந்தது

அன்று இலங்கைத் தொழிற்கட்சி கூடி, மூன்றுமணிநேரம் விவாதம் நடத்தியபின் ஐக்கியதேசியக் கட்சியோடு தனக்குள்ளஉறவைத் துண்டித்துக்கொள்வதென முடிவுசெய்திருக்கிறது. அது வரப்போகும் பொதுத்தேர்தலிலே எட்டு ஸ்தானங்களுக்குப் போட்டியிடுவதென்றும் தீர்மானித்திருக்கிறது. திரு. ஆர். ஈ. ஜயதிலக, எம். பி. அவர்கள் தொழிற்கட்சித் தலைவராகத் தெரியப்பட்டிருக்கிறார். கட்சிசெய்துள்ள முடிவின்படி, திரு. ஆர். ஈ. ஜயதிலகஅவர்கள் அரசாங்க கட்சியிலிருந்து விலகியிருக்கின்றார். தொழிற்கட்சியின் முன்னைநாள் தலைவரான திரு. ஏ. ஈ. குணசிங்கி அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கைக்குத் திரும்பிவரவிருக்கின்றார்.

## கம்யூனிஸ்த, சமசமாஜ கட்சிகள்

ஆரம்பத்தில் தாங்கள்போட்டியிட உத்தேசித்திருந்த பலதொகுதிகளைச் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு விட்டுக்கொடுக்கக் கம்யூனிஸ்தகட்சியும், சமசமாஜகட்சியும் வெகுதூரம் சம்மதித்திருக்கின்றன. தற்போது தங்கள்வசமுள்ள தொகுதிகளிலும், தங்களுக்கு நிச்சயமாக வெற்றிகிடைக்குமென்று சொல்லக்கூடிய தொகுதிகளிலுமே இடதுசாரிகள் போட்டியிடுவார்கள். மாத்தறை, அக்குறசைத் தொகுதிகளிற் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி போட்டியிடமாட்டாதாம்.

## இருவழிகளும் சாத்தியமன்று

மாத்தறையில்நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் பேசியபோது: "இந்த நாடு பிரிவினைசெய்யக் கூடியதுஅல்ல; தமிழர்கள் தமிழ்நாடு வேண்டுமென்றால், அவர்கள் படையெடுத்து வெற்றிகொண்டோ, அன்றேல் பாராளுமன்றத்தில் மூன்றில்இரண்டுபங்கு பெரும்பான்மை வாக்குகள்பெற்று அரசியற் சட்டமுறையாகவோ தமிழ்நாட்டைப் பெறவேண்டும்; இந்தஇரண்டுமுறைகளும் சாத்தியமற்றனவாகும்" எனக் கூறியிருக்கின்றார்; எங்கள் பாஷையைப் பாதுகாக்குங்கொள்கையை நாங்கள் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமானால், ஐக்கியதேசியக் கட்சிக்கு அடுத்தபாராளுமன்றத்தில் குறைந்தபட்சம் 65 அங்கத்தினராவது இருக்கவேண்டும்" எனக் கூறியிருக்கின்றார்.

---

பிரான்சிலே ஆர்ல்நகரில் வரிசை வரிசையாக வட்டவடிவமாக உயர்ந்த ஆசனமேடைகளைக்கொண்ட பிரமாண்டமான நாடகாரங்கம் ஒன்று இருந்துவருகிறது. இது றோமர்களால் சுண்ணச்சாந்து இல்லாமலே கட்டப்பட்டது. இதுகட்டப்பட்டு 2,000 வருடங்கள் சென்றபோதிலும் இதன் கற்கட்டுகள் இன்னுமே அசையாது இருந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரும் யேசுசபையாரும்

தங்கள்சபையின் ஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த 400-ம் ஆண்டு நிறைவுவிழாவின் ஞாபகார்த்தமாக உலகின் அநேக பகுதிகளிலிருந்துபோய் ஒன்றுகூடிய 3,000 யேசுசபைக்குருமாரும், குருத்துவமாணவர்களும் அன்று வத்திக்கான்மாளிகையில் பரிசுத்தபிதாவின் பேட்டி பெற்ருர்கள். அதற்கு இருதினங்களின்முன் இந்த நூற்ருண்டு விழாவை ஆரம்பிக்குமுகமாக அங்குள்ள அர்ச். இஞ்ஞாசியாரின் புராதன கோவிலில் நிறைவேறிய திவ்வியபூசைக்குப் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் சமூகமாயிருந்தார்கள். அர்ச். இஞ்ஞாசியார் 15-ம்கிறகோரியார்எனும் பாப்பானவராலே அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்று நான்குவருடங்களின்பின் — அதாவது 1626-ம்ஆண்டு இந்தக்கோவில் கட்டப்படலாயிற்று.

### முதல் கிறிஸ்மஸ் பூசை

தென் துருவப்பகுதியிலே ஆழமாகஉறைந்துள்ள பனிக்கட்டிப் பாறைகளை உடைத்து விஞ்ஞானஆராய்ச்சி நடத்துதற்கெனச் சென்ற1955-ம் ஆண்டு பிரயாணமான கோஷ்டி ஒன்றுடன்சென்ற ஓர்யேசுசபைக்குரவரும், ஓர்அமெரிக்ககடற்படை விசாரணைக்குரவருமான வண. டேனியல் லின்ஹன்சுவாமியார் சென்ற நத்தால்திருநாளன்று அங்கு திவ்வியபூசை நிறைவேற்றினர். அதனுல் தென்துருவ வட்டாரத்துள் நத்தால்விழா நடுப்பூசை நிறைவேறியிருப்பது இதுவே முதன்முறையாகும். 1947-ம் ஆண்டின் தைமாதத்திலே 'மவுண்ட் ஒலிம்பஸ்' என்ற கொடிக்கப்பலின் விசாரணைக்குரவரான வண. வில்லியம் மென்ஸறர்சுவாமியாரே தென்துருவகண்டத்தில் முதன்முதலாகத் திவ்வியபூசைநிறைவேற்றிப் பிரஸ்தாபமபெறலாயினர்.

### தொழிலாளரின் அதிமேற்றிராணியார்

இத்தாலியிலே மிலான்நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவருகிறவர் முன்பு பாப்பரசரின் இராச்சிய மந்திரியாராய்விளங்கிய மொந்தினிஆண்டவர். இவர்வத்திக்கானிலிருந்து இற்றைக்கு ஓர் ஆண்டின்முன்னரே மிலான்நகர் சென்றிருந்தபோதும் இந்தக்கம்யூனிஸ்தஅரணி உள்ள தொழிலாளர்களின்மத்தியில் இவரின்செல்வாக்கு ஏற்கனவே வெகுவாக அதிகரித்துள்ளது. இவர் கிரமமாகத் தொழிற்சாலைகளுக்கு விஜயஞ்செய்து, அவற்றிலுள்ள தொழிலாளர்களுடன் இன்பாகச் சல்லாபித்து, அவர்களின் குறைமுறைகள், கஷ்டங்களை விசாரணைசெய்து அவைகளை நிவிர்த்திசெய்து வருகின்ருர். இந்தத் தொழிற்சாலைகளில் அநேகம் கம்யூனிஸ்தர்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்தன. அதிமேற்றிராணியாரின் அயரா முயற்சியாலே இதுவரை தொழிலாளிகள் திருச்சபைமட்டிலே கொண்டிருந்த துர்அபிப்பிராயங்களும், துவேஷங்களும் எவ்வளவோநீங்கிவிட்டன. ஏலவே தானே "தொழிலாளரின் அதிமேற்றிராணியா"ரென அறியப்பெற்றுவிட்டஇவரைக் கம்யூனிஸ்தர்கள்எதிர்த்துக் கிளர்ச்சிகள்செய்வது ஆச்சரியமன்று. சமீபத்திலே இவரதுமாளிகையில் வெடிகுண்டு ஒன்று சதிமானமாக வைக்கப்பட்டு, பிந்த அது வெடித்து மாளிகைக்குச் சேதம்விளை[illegible]ருக்கு யாதுஅபாயமும் ஏற்படவில்லை. இதிலிருந்து அவர் கம்யூனிஸத்தைஎதிர்த்து நடத்திவரும்போராட்டத்தில் வெற்றிகொண்டுள்ளாரென்பது புலனுயிற்று.

### மேற்றிராணிமாரின் அன்பளிப்பு

மேற்குஜேர்மன் சமஷ்டிஅரசாங்கத்தின் கத்தோலிக்கபிரதமரான டக்றர் கொன்ருட் அடெனுவர்அவர்கள் சமீபத்திலேதமது 80-வதுவருடபிறந்த பெருநாளைக் கொண்டாடியபோது, ஜேர்மனியஅதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரெல்லாம் ஒன்றுசேர்ந்து அவருக்குப் பலவர்ணங்கொண்டு உருவச்சித்திரங்கள்தீட்டிய ஓர் தொகையான கண்ணுடிச்சனனல்களை அன்பளிப்புச் செய்தார்கள். இந்தச்சன்னல்களில் சித்திரித்திருந்த படங்களுள் [illegible] கொன்ருட்டின் பிரதிமையாகும். இந்தச் சன்னல்கள் ரேுவென்டோவ் எனுமிடத்திலுள்ள பிரதமர் அடெனுவர்அவர்களின் விசாரணைப் பங்குக் கோவிலில் அமைக்கப்படும். பரிசுத்த பாப்பரசரும் இச்சந்தர்ப்பத்திலே பரிசுத்த ஸ்தானத்தால் வழங்கப்படும் இரண்டாவது உந்நதமகிமை வரிசையான "கோள்டின் ஸ்பேர்" எனும் மகிமைவரிசையை அவருக்குச் சன்மானிக்கலாயினர்.

### ஆபிரிக்காவின் வேதவிருத்தி

ஆபிரிக்காவைச்சேர்ந்த உருண்டிநாட்டிலே இற்றைக்கு 50 வருடங்களின்முன் 292 கத்தோலிக்கர்மாத்திரமே இருந்தார்கள். ஆனுல், இன்றோ அங்கு 9,06,343 கத்தோலிக்கர் இருந்துவருவதாகவும், மற்றும் 2,28,000 பேர் ஞானஸ்நானம் பெற ஆயத்தஞ்செய்து வருவதாகவும் பிந்திய அதிகாரபூர்வமான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களை ஒன்றுசேர்த்துப் பார்க்குமிடத்து அந்நாட்டின் சனத்தொகையில் நூற்றுக்கு 57விகிதமானேர் கத்தோலிக்கரே. அதனுல் இவர்கள்தொகை அங்குள்ள அஞ்ஞானிகளிலும் சுமார் 3,46,000 பேரால் கூடியதாகும். அங்குள்ள அரசர்கள், சிற்றரசர்களிலே சிலர்நீங்கலாக ஏனையோரெல்லாம் வேதானுசாரமுள்ள கத்தோலிக்கராவர்.

### கத்தோலிக்கரான அபேட்சகர்

இந்தியாவிலே ஆந்திராநாட்டில் ஸ்ரீகாகுளம் பகுதியைச் சேர்ந்த சாலூர்தொகுதிச் சட்டசபைஅங்கத்தவரான திரு. பி. இராஜையா அவர்கள் முன்னில்லாத நவீனமாதிரியான ஓர்குற்றச்சாட்டுக் குள்ளாயிருக்கின்ருர். இவர் தமதுஒன்பதாம்வயதிலே கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொண்டார். இவர் கொண்டாடோறஸ் பகுதியிலுள்ள மலைச்சாதியினரைச் சேர்ந்த ஓர்மலைச்சாதியினர். சென்ற பொதுத்தேர்தலிலே இவர் ஆந்திராசட்டசபையின் ஒதுக்கப்பட்ட ஸ்தானம் ஒன்றுக்கு அபேட்சகராகமுற்பட்டுத் தம்முடன் போட்டியிட்ட ஓர் சுயேச்சை அபேட்சகரைத் தோற்கடித்துவெற்றியீட்டினர். சமீபத்திலே அந்தத் தோல்வியுற்றஅபேட்சகர் தேர்தல்ஆட்சேப மனுவொன்று நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்து, அதிலே திரு. பி. இராஜையாஅவர்கள் ஓர்கத்தோலிக்கர்; அதனுல் மலைச்சாதியாருக்கென்று ஒதுக்கப்பட்ட ஸ்தானத்துக்குப் போட்டியிட அவர் தகுதியற்றவரென ஆட்சேபித்திருக்கின்ருர். இந்தமனுவிசாரணையின் முடிபு என்னவாகுமோ என்று பலரும் ஆவலோடு காத்திருக்கிருர்கள்.

# தேசீயகுருமடத்தின் முதற்பலன்

## முதலாவது குரவர் ஓர் இந்தியர்

கண்டியிலுள்ள முன்னைநாள் பாப்பரசர்குருமடத்தின் கோதிக்கமாதிரியான அழகியசிற்ருலயம் கட்டப்பெற்றபின் கடந்துபோன 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டகாலத்திலும் நூற்றுக்கணக்கான தியாக்கோன்மார் குருப்பட்டாபிஷேகஞ் செய்யப்பெறுமாறு அதன்விசாலமிக்க பலிபீடஸ்தானத்திலே முழந்தாட்படியிட்டிருக்கின்றனர். அவ்வாறே சென்றமார்கழி மாதம் 21-ந் திகதியன்றும் கிறீஸ்துநாதரின் அதிகாரம் சூட்டப்படுமாறு ஓர் இளந்தியாக்கோனுகிய வண. தொமினிக் வி. டி' சூசாபிறதரும் அங்கு முழந்தாளிலிருந்தார். ஆனுல், இம்முறை இவர் சரித்திர வரலாறுஒன்றைச் சிருட்டித்துவிட்டிருக்கின்ருர்.

ஏனெனில், கண்டியிலே பாப்பரசர் குருமடத்தினிடமாகச் சென்ற 1955-ம ஆண்டு புரட்டாசிமாதம் 10-ந் திகதியன்று ஆரம்பிக்கப்பெற்ற இலங்கைத் தேசீயகுருமடத்தின் முதலாவதுகுருவானவர் இவரே. மனவருட்சிக்குரிய இந்தக் குருத்துவாபிஷேக திருச்சடங்கு கொழும்பு அதிமேற்றிராணியாராலே நடத்தப்படலாயிற்று. அத்தருணம் குருமாரும், விசுவாசிகளுமாக ஓர்தொகையானேர் சமூகமாயிருந்தார்கள். அன்றைத்தினத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துபோலும் உலகபத்திரிகைகளும் தங்கள் சொந்தப் படம்பிடிப்பாளரையும், நிருபர்களையும் அச்சமயம் அங்குகொண்டிருந்தன.

அபிஷேக திருவைபவத்தின் பின் அதிமேற்றிராணியாண்டவர்அவர்கள் பேசியபோது: இச்சந்தர்ப்பம் இரட்டைச் சரித்திர சம்பந்தமானது; ஏனெனில், முதலாவதாக, இலங்கைத் தேசீய குருமடம் ஆரம்பமானபின் இதுவேமுதலாவது குருப்பட்டாபிஷேகமாகும்; இன்னும் "ரொன்சூர்"எனப்படும் ஆரம்பபட்டமுதல், குருப்பட்டம்ஈருக எல்லாப்பட்டங்களும் இன்றைய தினம் வழங்கப்பட்டிருக்கின்றன; இரண்டாவதாக, இந்தக்குருமடத்தின் முதற்கனியான புதிய குருப்பிரசாதி ஓர்இந்தியராவர்; இந்தியாவின் அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் திருநாளிலே இவர்குருத்துவாபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்எனக்கூறிப் பின்னர்குருத்துவமாணவர்கள் சகலருக்கும் சுருக்கமாகச் சில நன்மதிகள் உரைத்துவிட்டு, புதியகுருப்பிரசாதி வெற்றிகரமாகத் தமது திருத்தொண்டுகளை நடத்திவர வேண்டுமென ஆசித்துநின்ருர்.

மறுதினம் புதியகுரவர் குருமடத்துச் சிற்ருலயத்திலேயே தமது குருசகோதரர்கள் இருவரையும தியாக்கோனுகவும், உபதியாக்கோனுகவும், குருமடத்தின் அதிபர்சுவாமிகளைத் துணைக்குரவராகவுங்கொண்டு தம்முடைய முதற்பூசையை நிறைவேற்றினர். பூசையின் பின் தமதுசகோதரர்கள் சமேதராய் விமானமூலம் இந்தியாவுக்குப் பயணமாயினர். வண. தோமினிக் டி' சூசாசுவாமியார் குருத்துவ–சந்நியாச – கன்னிகா அழைத்தல்களுக்கு ஓர்நாற்றுப்பாத்திபோன்று திகழ்வதாகிய மங்களூரைச் சேர்ந்தவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிமாதம்

**போதுக்கருத்து:** *மித மிஞ்சிய மதுபானம், மற்றும் சுகபோகங்களை மக்கள் தவிர்க்கும்படியாக வேண்டிக்கொள்வது.*

**மிஷன்கருத்து:** *வியெற்நாம் நாட்டின் திருச்சபைக்காக மன்றாடிக்கொள்வது.*

சத்தியவேத

# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
மாசி மாதம் 2-ந் திகதி

## போம்வழி யாது?

ஏனையபல நாடுகளிற்போன்று கலகமோ, இரத்தப்பிரவாகமோ எதுவுமின்றிச் சுதந்திரத்தை ஈட்டிக்கொண்ட எமது செல்வநாடு — அதனை ஈட்டிக்கொண்டதுமுதல் அமைதியும், சமாதானமும் நிலவியிருந்த எமது ஸ்ரீ லங்காநாடு பாஷைப்பிரச்சினையொன்று எழப்போய் இன்று அமைதிகுலைந்து, சமாதானங்குறைந்து, அல்லோலகல்லோலமான ஓர் பரிதாபநிலைக்குள்ளாயிருப்பது வருந்தத்தக்கதே. இந்தமொழிப்பிரச்சினையைக் கிளப்பியவர்களும், அதற்காகக் கிளர்ச்சி செய்துவருகிறவர்களும் எம்செல்வநாட்டின் சென்மவிரோதிகளென்று துவேஷிக்கப்படுங்காலம் நிச்சயமாக வந்தேதீரும். ஆனல், இந்தமொழிப்பிரச்சினை வரப்போய்த் தமிழ்ப்பேசும்மக்களின் ஐக்கியமும், ஐக்கியமுன்னணியும் படும்பாடோ அம்மம்ம! எடுத்துக்கூறுந் தரமன்று. தமிழ்நாடு வேண்டுமென்று ஆர்ப்பரிப்பார் ஒருபுறமும், தமிழரசு வேண்டுமென்று அருட்சிசெய்வார்மறுபுறமும் வாதாடிக்கொண்டிருக்க, ஆட்டுக்கடாச்சண்டையிலே நரிஇரத்தங்குடித்தவாருய்க் கம்யூனிஸ்தகட்சியும், சமசமாஜகட்சியும் "தொட்டுக்கொள் அம்மா தொட்டுக்கொள்" என்று மொழிப்பிரச்சினையைத் தொட்டுக்கொண்டு யாழ்ப்பாணத்தில் இடங்கோலிவிடுமோ? என்றுதான் இப்போது கவலையும், அச்சமும் கொள்ளவேண்டிய நிலைமைஏற்பட்டிருக்கிறது. அன்றுஇனய பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் மாத்தறையிற்பேசியதுபோல், "இன்று கம்யூனிஸ்தகட்சியினர் தமதுபோர்முனையை (சமசமாஜிகளும் அவ்வாறே) யாழ்ப்பாணத்துக்கு மாற்றிவிட்டிருக்கின்றனர்; அங்குமொழிப்பிரச்சினை அவர்களின் பிரசாரத்துக்கு இடமளிக்கின்றது; யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஒவ்வோர் தொகுதியிலும் தங்கள் அபேட்சகர்களைத் தேர்தலுக்குநிறுத்தக் கம்யூனிஸ்தகட்சியினர் திட்டமிட்டிருக்கின்றனர்" என்பது உண்மையாகுமோ என்றுதான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. அவ்வாருயின் "பிச்சைவேண்டாம் தாயே, நாயைப்பிடி" என்றவாருக நடந்துகொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, இதற்குப் போம்புத்தியாது? தமிழ்நாட்டுக்கட்சி, தமிழரசுக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி சமசமாஜகட்சி ஆகியவற்றையெல்லாம் புறம்பே ஒதுக்கிவிட்டு, வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலுமிருந்து பாராளுமன்றத்திற்குக் கட்சிச்சார்பற்ற பதினுறுபிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்பவேண்டுமென அரசியல்வாதி ஒருவர் கூறியஆலோசனை வரவேற்கத் தக்கதாகுமன்றே! ஒற்றுமை, ஒற்றுமை, ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்றமொழிகளே இன்றுஎமதுசனத்தலைவர்கள், அரசியற்தலைவர்களின் வாயிலிருந்து பிறந்தவண்ணமிருக்கின்றன இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருஅவர்களின் வாயிலிருந்தும் இம்மொழிகளே இன்று பிறந்துகொண்டிருக்கின்றன. ஆனல், ஒற்றுமையோ சுயநலவாதிகளினதும், அதிகாரவேட்கைகொண்ட சிலஅரசியல்வாதிகளினதும் தந்திரோபாயங்களாலே கைகூடுவதாயில்லை.

## சுதேச வர்த்தமானம்

### இருதொகுதிகளுக்கும்போட்டி

தற்போது சனப்பிரதிநிதிகள் சபையில் தம்பதேனியாப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்கள் அடுத்துவரும் பொதுத்தேர்தலிலே களனித்தொகுதிக்கும், தம்பதேனியாத்தொகுதிக்கும் ஒருங்கேபோட்டியிடத் தாம்தீர்மானித்திருப்பதாய்ச் சென்றவியாழக்கிழமை கித்தலடேனியாக் கிராமாபிவிர்த்திச்சங்க கூட்டத்திலே தெரிவித்திருக்கின்றார்.

### மோட்டர்கார் விபத்து

கொழும்பு — புத்தளவீதியிலே 81-ம் மைலில் சென்றஞாயிற்றுக்கிழமை புதியகார்ஒன்றுபுரண்டு விபத்துக்குள்ளானபோது, அதில்பிரயாணஞ்செய்த திரு. எம். செல்வராஜாஎன்பவர் கடூரகாயமடைந்து குருநாகல்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படும் வழியில் இறந்துபோயினர். அதன் சாரதியென்று சொல்லப்படுகிற இரகுநாதனும், மற்றோர்பிரயாணியான திரு. ரி. புண்ணியம்என்பவரும் சிறுகாயங்களுடன் தப்பிக்கொண்டனர்.

### அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி

இலங்கைக்குப் பாப்பாசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மகாமேன்மைதங்கிய எம். ஏ. லூக்காஸ் ஆண்டவர்அவர்கள் சென்றபுதன்கிழமை கண்டிக்கு விஜயஞ்செய்தபோது, அந்நகர சத்தோலிக்கமக்களால் மகத்தான ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்படலாயினர். கண்டி மேற்றிராணியாரான மகாவந். பேர்ணுட் றெஞ்ஞோ ஆண்டவரின் தலைமையிலே பெருந்தொகையான கார்கள் ஊர்வலமாகப் பேராதனைப்பாலத்திலுள்ள நகர்வாயிலிலிருந்து அர்ச். அந்தோனியாரின் ஆசனக்கோவில் மைதானத்துக்கு அவரை அழைத்துச்செல்லவே, அங்கு கண்டிநகர விசாரணைப்பங்குக் கத்தோலிக்கமக்கள் ஆடம்பரமாக அவரைவரவேற்றாகள். அவ்வேளை அவர் ஆற்றிய சொற்பொழிவிலே, கத்தோலிக்க சேவையில் சாதாரணகத்தோலிக்கர் ஈடுபடவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தலாயினர்.

# நவகன்னியர்களின் பிரயாணம்

சென்றதைமாதம் 5-ந் திகதியன்று இருயௌவன பெண்மணிகள் இளமைக்குரிய தமது உணர்ச்சிதேங்கும் பூரணஆர்வத்துடன் இலங்கையிலே தமக்கு அருமைபெருமையானவர்க்கெல்லாம் பிரியாவிடைகூறிக்கொண்டு, தாம் ஆசித்துத்தேடிய அன்புப்பணியைமேற்கொண்டு, "ஏஷியா" எனுங் கப்பலிலே உலகின அழகுத்திலகமாய்விளங்கும் சுவிற்சர்லாந்துக்குச் சிந்தாத்திரையாகச் செல்லலாயினர். அங்கேஇவர்கள் திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமாரின் பிரதம தாய்மடத்திலே கன்னிகாவாழ்க்கையிலும், வருங்காலத்தில் தாம் மேற்கொள்ளவிருக்கும் பிறர்சிநேகத்தொண்டிலும் பயிற்சிபெற்றுக்கொண்டு அச்சபையின் பூரணதுறவுபூண்ட கன்னியாஸ்திரிமாராக இலங்கைக்குத் திரும்புவார்கள்.

இவர்கள்இருவரும் யாழ்ப்பாணம், திருச்சிலுவைச்சபைக் கன்னிகாமடத்திலே நவகன்னியர்களாய் இருந்தவர்கள். இந்தக் கன்னிகாமடம் சென்றவருடம் மாசிமாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதும், அதற்குமுன் இச்சபைக்குரிய இந்திய மாகாணத்தின் ஒருபகுதியாய் இலங்கை இருந்துவந்ததென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.



திருச்சிலுவைக் கன்னியர்களின் பிரதம தாய்மடம்.

அங்ஙனம் சுதந்திரமாகாண மானதும் அப்போது யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியில் முதலாளித்தாயாராய் இருந்துவந்த சங். அலோய்சியா தாயார் மாகாண சிரேஷ்டதாயாராக நியமனஞ் செய்யப்பெற்ருர். புதியகன்னிகாமடத்தின் முதலாவது சிரேஷ்டதாயாருமான இவர் இலங்கையில் ஸ்தாபகமான இந்தக்கன்னிகாஸ்தாபகத்தின் அதிகம் இளமைப் பிராயத்திலேயே திவ்வியகர்த்தரில் தமக்குமிகவும்பிரியபிள்ளைகளில் இருவரை முதன்முதலாகச்சென்று கன்னிகாபயிற்சிபெற்றுவருமாறு பிரதம தாய்மடத்துக்கு அனுப்பிவைக்கும் பாக்கியத்தையும், விசேஷ உரிமையையும் பெற்றுக்கொள்ளலானர். இவ்வாருக ஸ்ரீலங்காவிலே இந்தக் கன்னிகாகுடும்பத்தின் வளர்ச்சிக்கென்று ஸ்திரமான அத்திவாரமும் இடலாயினர்.


இந்தஇருநவகன்னியர்களும் லங்காவின் செல்வப்புதல்விகளே. இவர்களில்ஒருவர் தூரமான தென்னிலங்கையிலுள்ள மாத்தறையைச்சேர்ந்தவர். யாழ்ப்பாணநகரைச்சேர்ந்த மற்றவர் திறமைவாய்ந்த ஓர்கத்தோலிக்க ஆசிரியரும், கத்தோலிக்க சேவையாளரும், சமூக தொண்டருமெனப் பெரிதுங் கொண்டாடப் பெறுகிறவரான திரு. சி. டபிள்யு. டி. அல்வினெஸ்அவர்களின் புதல்வியாவர். இரட்டைப் பிள்ளைகளில் ஒருவரான இவரது உடன்பிறந்தசகோதரி தனது திவ்விய எசமானின் அழைத்தலுக்குச் செவிசாய்த்து ஏற்கனவே திருக்குடும்ப கன்னிகாசபையில் சேர்ந்திருக்கின்ருர். இவரின் மூத்தசகோதரர் ரோமாபுரியிலே அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள்சபையில் ஓர்குருவாக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்.

திருச்சிலுவைக் கன்னியர்கள்சபையானது சுவிற்சர்லாந்திலே மென்சின்ஜென்நகரில் 1844-ம்ஆண்டு அடியிடப்படலாயிற்று. இதனை உடனின்று அடியிட்ட முதலாவதுசிரேஷ்டருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கானவிசாரணை இப்போது சித்திகரமாக நடைபெற்றுவருகின்றது. ரோமாபுரியிலே இந்தக்கன்னிகாகுடும்பத்தின் பரிபாலகர் 12-ம் பத்திநாத பாப்பரசரே.

இலங்கையிலே இன்று இந்தக்கன்னியாஸ்திரிமார் ஆற்றிவரும் பிரதான பிறர்சிநேகத்தொண்டுகள், ஆஸ்பத்திரிகளில் நோயாளரையும், வயோதிகர் சாலைகளையும், தாய்மார் வேலைக்குப் போயிருக்கும்போது குழந்தைகளையும் பராமரிப்பதும், சமூகசேவையுமே.

"வேளாண்மையோ அதிகம், வேலையாட்களோ கொஞ்சம்பேர்." தேவனிலும், ஆத்துமாக்களிலும்கொண்டுள்ள அன்புமேலீட்டால் திருச்சிலுவைக் கன்னியர்களாக அன்புப்பணி பூண்டுள்ள இந்தத் தொண்டர்கள்குழுவில் சேரவேண்டுமெனத் தூண்டப்படுகிறவர்கள் எந்தவேளையிலும் அதில்பிரவேசிக்கலாம். உதாரகுணமுள்ள இருதயமுடையவர்களும், தேவநேச தாகமுடையவர்களும், அதிகம் குறைந்த கல்வித்தரமாக இந்நாட்டின் மூன்றுபாஷைகளுள் எதிலும் எஸ். எஸ். சி. தாரதரப்பத்திர முள்ளவர்களாய்ப் 18 அல்லது அதற்குமேற்பட்ட வயதுடையவர்களும், நியாயமான ஆங்கிலபாஷா அறிவுடையவர்களுமான பெண்பிள்ளைகள் இந்தக் கன்னிகாகுடும்பத்திலே யாழ்ப்பாணம், கடற்கரை வீதியிலுள்ள திருச்சிலுவைக் கன்னிகாமடத்தின் சிரேஷ்ட தாயாரால் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேதபோதகநாடுகளின் குரலொலி

"இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன்சகோதரன் கஷ்டப்படுகிறதைக் கண்டும் அவனுக்கு இரங்காமல் தன்னுள்ளத்தை மூடிக்கொண்டால், தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி?" (I அரு. 3: 17.)

## இப்பக்கத்தின் நோக்கம்

வேதபோதகநாடுகளின் நண்பர்களே!

ஐப்பசிமாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின ஞாயிற்றுக்கிழமை வேதப்பரப்புதல் ஞாயிற்றுக்கிழமை. அந்நாள் கடந்து மூன்று மாதம்ஆயிற்று, ஆயினும் வேதப்பரப்புதல் என்னும் கடமை ஒழியவே ஒழியாது. ஒவ்வோர்நாளும் அக்கடமை நம்மைத் தொடருகின்றது. அநேகர் வேதப்பரப்புதல் ஞாயிற்றுக்கிழமையோடு அக்கடமையும் முடிந்துவிட்டதென்று நினைக்கிறார்கள்போலும். இவ்வெண்ணம் தவறானதாகும். ஆதலால், இக்கடமையை ஞாபகப்படுத்தும்படி "பாதுகாவல"னில் ஒவ்வோர்மாதமும் ஒருபக்கம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. அதைத்தவறாது வாசிக்க முயலுங்கள்.

அதில் ஒருகோணம் பரித்தியாக கோணமென்று பிரிக்கப்பட்டிருக்கிறது. வேதம்பரம்புதற்கான பரித்தியாகங்களை நீங்கள் செய்யும்போது அவைகளைத் தேசிய தலைவர், மேற்றிராணியார் வாசம், சிலாபம், அல்லது மேற்றிராசனத்தலைவர், மேற்றிராசன வாசம், யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தால் அவைகள் பிரசுரிக்கப்படும்.

### "கிறீஸ்துநாதருக்கு நீங்களும் தேவை"

குருத்தோலை ஞாயிறு அன்று எமது இரட்சகர் தமது இரு சீஷர்களைப் பார்த்து, "பெத்தானியாவிலிருந்து ஜெருசலேமுக்குப் போகிறவழியாற் போங்கள். ஓர் மனிதன் ஓர் கழுதையோடு நிற்பதைக்காண்பீர்கள். அவனிடம் எசமானுக்கு இதுதேவைஎன்று சொல்லுங்கள்" என்று சொன்னார்.

தாம் ஆரவாரத்தோடு ஜெருசலேமுக்குள்பிரவேசிக்க அக்கழுதை தேவையாயிற்று. ஆனதால், அக்கழுதை எசமானுக்குத் தேவைஎன்று மாத்திரம் சொல்லக் கட்டளையிட்டார். அது சொந்தக்காரனுக்குத் தேவையாயிருக்கும். அவர் தாமதிக்கலாம், அல்லது வேறுநியாயங்கள்சொல்லலாம். இவையெல்லாவற்றையும் தவிர்த்து அதுதமக்குத்தேவை என்றுமாத்திரம் சொன்னதை அவதானியுங்கள். யேசுநாதர் எங்களிடமும் தமக்குத் தேவைஎன்று கேட்கும்பொழுது நாமும் சாக்குப்போக்குகள் சொல்லாமல் கேட்டதைக் கொடுக்க—அவருக்கு எல்லாவற்றிலும் அமைவது கடனென்றுபடிப்பிக்கிறார்.

மேலும், தமதுதேவை முடிந்ததின்பின் அக்கழுதையைச் சொந்தக்காரனிடம் கொடுத்துவிடவும் கருத்துள்ளார்.

யேசுநாதரின் உத்தானத்தின்பின் சொந்தக்காரன் அவ்வளவு சந்தோஷ ஆர்ப்பரிப்புடன் எசமான் ஜெருசலேமுக்குளெழுந்தருளநான்எனது கழுதையைக் கொடுத்தேனேயென்று மகிழ்ந்திருப்பான்.

எங்கள்கல்வி, பணம், பரித்தியாகம் ஆகியவற்றை ஆண்டவருக்குக்கொடுத்தால் அவைகளைத் திரும்பஎங்களுக்குத் தருவார். ஏராளமான பலனை—எங்களை ஆனந்தத்தால் பூரிக்கச்செய்வதுமான பலனை இம்மையிலே தருவார். ஆகவே, எங்கள்மீட்பர் கேட்பதை மறுக்காது, சந்தோஷமாய்க்கொடுக்க ஆயத்தமாயிருக்கக் கடவோம். ஆசியாவிலோ, ஆபிரிக்காவிலோ, அல்லது பூமியின் எப்பகுதியிலோ சர்வேசுரனுடைய இராச்சியம்பரம்ப உங்கள் செபம், தபம், பணம்முதலியவைகளை அர்ப்பணம்பண்ணும்படி அவர் கேட்கிறார். அவைகளை ஒருகைமாற்றாகவும், பெரும்வட்டியோடு திரும்பப்பெறும் முதலாகவும் நம்பிக்கையோடு கொடுக்கத் தாமதிக்கலாகாது.

### எல்லோரும் இதை அறிவார்களா?

பாப்பரசரின் வேதப்பரப்புதல் சபையாருக்காக வருடந்தோறும் 15,000 பூசைகள் செய்யப்படுகின்றன.

அக்கியானிகள் மனந்திரும்ப ஏறக்குறைய1,00,000 குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் செய்யும்செபங்கள், தபங்கள், வேலைகளில் அச்சபையார் பங்குபற்றுவார்கள். இம்மையில் மாத்திரமன்று, மறுமையிலும் அவர்கள் பலனடைவார்கள்.

ஓர்குடும்பம்முழுவதும் இச்சபையில் சேரலாம். நீர் இச்சபையில் சேர்ந்துவிட்டீரா? இல்லையானால், இன்றைக்கே உமது பங்குச்சுவாமியாரிடம் சென்று உமதுநாமத்தைப் பதிந்து சேர்ந்துகொள்ளும். இத்தகையஇலாபத்தைக் கைநெகிழலாமா?

## சில தேசங்களிலிருந்து வரும் செய்திகள்

### தென் கோறியா

சென்றஆண்டு கிடைத்தசெய்தி — 22,776 பேர் ஞானஸ்நானம்பெற ஆயத்தப்படுத்துகிறார்கள். இவர்களுள் 14,499 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இன்னும் அநேகர் ஞானஸ்நானம்தரக் கேட்கிறார்கள். இவர்களில் அநேகர் வறுமைப்பட்டவர்கள். இவர்களுக்கெனப் பாடசாலைகள், கோவில்கள்இல்லை. போதிக்கக் குருமார் சொற்பம். இச்சனங்களின் விசுவாசமோ திடமானது. விசுவாசத்திற்காக ஆயிரக்கணக்கானோர் பசி, வேதனை, நட்டம்முதலியவைகளைத் தைரியமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அன்னாரின் விசுவாசம்தளர நாம் விட்டுவிடலாமா?

### ஜப்பான்

1953-ம் ஆண்டில் 80லட்சம் கிறீஸ்தவர்களுக்கு 238 குருமார் வேதஊழியம் புரிந்தார்கள். இப்பொழுது 795 குருமார், 970 சந்நியாசிகள், 90 கன்னிகாஸ்திரிகள் திருத்தொண்டு செய்கிறார்கள்.

### போர்மோசா

| | | | |
|---|---|---|---|
| 1945-ம் | ஆண்டில் | 8,000 | கிறீஸ்தவர்கள். |
| 1951-ம் | ,, | 10,000 | ,, |
| 1953-ம் | ,, | 30,000 | ,, |
| 1954-ம் | ,, | 34,000 | ,, |
| 1950-ம் | ஆண்டில் ஆக | 15 | குருமார் தொண்டு செய்தனர். |
| 1955-ம் | ,, | 339 | ,, |

ஆனால்,

### சீனுவிலோ

| | | | |
|---|---|---|---|
| 1947-ம் | ஆண்டில் | 5,496 | குருமார்தொண்டாற்றினர். |
| 1951-ம் | ,, | 3,056 | ,, |
| 1952-ம் | ,, | 1,527 | ,, |
| 1953-ம் | ,, | 621 | ,, |
| 1954-ம் | ,, | 300 | ,, |

தற்போது: 43 குருமார் தொண்டாற்றுகிறார்கள்.

## மிஷன் செபமாலை

### 60 இலட்சம் ஆத்துமாக்களுக்காக ஐந்து காரணிக்கம்

ஓர்துளி இரசாயன அயோடின் ஏழாயிரம் துளி தண்ணீரைத் தன்னிறமாக்கிக் கொள்ளுமாம். அதற்கொப்ப, ஓர்காரணிக்கம் ஒருலட்சம் ஆத்துமாக்களை மனந்திருப்பப் போதும். இவ்வாத்துமாக்களை மனந்திருப்பும்படி அமெரிக்காவிலுள்ள பேர்பெற்ற அதிமேற்றிராணியாரும், வேதப்பரப்புதல்சபைத் தேசிய தலைவருமாகிய மகாவந். சீன் ஆண்டவர் அவர்கள் ஒருசெபமாலையை ஏற்படுத்தியிருக்கிறார். இதிலே ஒவ்வொரு காரணிக்கமும் வெவ்வேறு நிறமுடையது. சிவப்பு அமெரிக்காவையும், வெள்ளை ஐரோப்பாவையும், பச்சை ஆபிரிக்காவையும், நீலம் ஓஷியானியாவையும், மஞ்சள் ஆசியாவையும்குறிக்கும். ஒவ்வோர் காரணிக்கத்தையும் சொல்லும்போது அவ்வத்தேசங்களில் வேதப்பரப்புதல் ஊழியம்செய்துவரும் குருமார், கன்னிகாஸ்திரிகள், சந்நியாசிகளையும், வேதத்தை அறியாத அஞ்ஞானிகளையும் ஞாபகப்படுத்திக்கொள்ளலாம்.

இச்செபமாலையைப்பெற விரும்புகிறவர்கள் தேசியதலைவர் சிலாபம், அல்லது மேற்றிராசன தலைவர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குஎழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 1-50

## பரித்தியாகக் கோணம்

வேதப்பரப்புதல் சபையின் தேசிய தலைவர்பெற்றுள்ள சில கடிதங்களை வெளியிடுகிறோம். அவைகள் அஞ்ஞானிகள்மட்டில் அவர்கள் கொண்டிருக்கும்அன்பையும், தயாளகுணத்தையும், பக்திவேகத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. எம்மவரும் இவர்களைப் பின்பற்றுவார்களாக. செய்யும் பரித்தியாகங்களைத் தேசியதலைவருக்கு எழுதினால் அவைகள் பத்திரிகையில் வரும். சிறார்களும், வாலிபர்களும், வயோதிபரும் அவர்கள்காட்டும் முன்மாதிரிகையைப் பின்பற்ற முடியும்.

### மொறட்டுவா

இத்துடன் ரூபா 4 அனுப்புகிறேன். 2ரூபா விசுவாசப்பரப்புதல் சபைக்கு. 2ரூபா புதிய செபமாலை ஒன்றிற்காக. எனது வயது 15. ஒவ்வோர் மாதமும் எனது பிரத்தியேக செலவுக்கெனத் தரப்படும் 5 ரூபாவில் ஒருபகுதியை மாதந்தோறும் உங்களுக்கு அனுப்பிவைப்பேன். எனது உடன்மாணவரோடு இதைப்பற்றிக் கதைத்து அவர்களையும் தூண்டிவிடுவேன்.

### பம்பலப்பிட்டியா

சிறுபிள்ளைகள் தன்னும் செய்யும் பரித்தியாகங்களை உங்கள் பத்திரிகையிற் கண்டபொழுது நானும் சிலபரித்தியாகங்களை வேதப்பரப்புதலுக்காகச் செய்யத் தூண்டப்பட்டேன். பிதாவே, நான் ஒருவறியவன். எனது தந்தையும், தாயும் வறியவர்கள். நான் என்னபரித்தியாகம் செய்யலாமென்று யோசித்தேன். பாடசாலைக்குப்போகப் பஸ்செலவுக்கும், பருகத்தேநீருக்கும் எனதுபெற்றோர் பணம்தருவது வழக்கம். நான் காலையில் பாடசாலைக்கு நடந்துசென்றேன். பின்னேரத் தேநீரைப் பருகாமல் ஒறுத்தேன். இப்படிச்செய்து நான்சேர்த்தபணம் 3ரூபா. இதை உங்களுக்கு அனுப்புகிறேன். சொற்ப பணம். ஆனாலும் என்னால் கூடியதைச் செய்தேன்.

(வளரும்)

"இந்த ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகளும் என் தூரற்சத்தத்தைக் கேட்கும்; அப்பொழுது ஒரே ஆட்டுக்கிடையும், ஒரே மேய்ப்பனும் ஆகும்." (அரு. 10: 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ அழைத்தலின் குரல்

சர்வேசுரனே தேவஅழைத்தல் என்னும் உந்நத வரத்திற்குக் காரணகர்த்தாவாய்இருந்த போதிலும், மக்களை இந்த உந்நத அழைத்தலுக்குச் சித்தஞ் செய்யும்தாய்மார் அவரது உதவிக் காரணகர்த்தாக்கள் என்றே சொல்லலாம். ஞானஸ்நானத்திலே திவ்விய யேசுவின் திருஇரத்தத்தினுல் கழுவப்பட்ட பிள்ளைகளைத் தாய்மார் சர்வேசுரனுக்குக் காணிக்கையாகஒப்புக்கொடுக்கும் வழக்கம்உண்டு. அச்சமயத்திலே அவர்கள் பிள்ளைகளுக்குப் பூலோக நன்மையை மாத்திரம்கேட்டு, பரலோக நன்மையைக் கேளாமல் விட்டுவிடுகிருர்கள். தேவஅழைத்தல் பரலோகநன்மைகளில் ஒன்ருகும். "என் சர்வேசுரா, இதோ நீர் எனக்கு இலவசமாகக் கொடுத்த மகன், மகள் உமக்கு முழுவதும் சொந்தம். எனக்கு இரவலாகமாத்திரம் கொஞ்சக்காலத்திற்குக் கொடுத்திருக்கிறீர். உமக்குச் சித்தமானுல் இவர்களைக் குருவாக அல்லது கன்னியாஸ்திரியாகச் செய்தருளும்" என்று தாய்மார்சொல்லி மன்ருடுவார்களேயானுல் இவ்விதகாணிக்கை சர்வேசுரனுக்கு எவ்வளவோ பிரியமாயிருக்கும். ஆனுல், எத்தனை தாய்மார் இவ்விதம் சொல்லுகிருர்கள்? மன்ருடுகிருர்கள்? தேவ தாயார் தமது ஏககுமாரனைப் பூலோக இரட்சணியத்திற்காகத் தேவாலயத்தில் காணிக்கையாகச் செலுத்தினர். ஆசைப்பலியே சர்வேசுரனுக்கு அதிகம்பிரியமானதென்று பின்வருஞ் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

சர்வேசுரன் ஆபிரகாமுக்கு அரிதாயளித்த ஈசாக்என்ற ஏககுமாரனைத் தமக்குப் பலியிடுமாறு அவருக்குக் கற்பித்தார். இக்கட்டளை ஆபிரகாமுக்குச் சொல்லமுடியாத கஸ்தியை வருவித்ததெனினும் அவர் உயிருள்ள விசுவாசமுடையவராயிருந்தமையால், தனதுகுமாரனின் சிரசின்மேல் விறகுகட்டைச்சுமத்தி, தான் கொள்ளிக்கட்டையையும், வாளையும் ஏந்திக்கொண்டு பலியிடத்தைநோக்கிச் செல்லுகின்ருர். செல்லும் வழியிலே மகன் பிதாவைவிளித்து: "அப்பா, இதோ நெருப்பும், விறகும் இருக்கின்றன; தகனப்பலிக்கு வேண்டிய மிருகம்எங்கே?" என்று வினவுகின்ருன். அப்பலிப்பொருள் தனது அருமைப்புதல்வன்தான் என்று நினைத்தபொழுது ஆபிரகாமின் இருதயம் எவ்வளவாகப் பதைத்துத்துடித்திருக்கும்! ஆனுல். தனது மனவேதனையை வெளிக்காட்டாமல் மகனைப்பார்த்து: "தகனப்பலிக்குத் தேவையான மிருகத்தைக் கடவுளே முஸ்திப்புச்செய்து கொடுப்பார், மகனே!" என்று சாந்தமாகப் பதிலளித்து, இருவரும் தொடர்ந்து செல்லுகிருர்கள். பலியிடவேண்டிய இடத்தைச் சேர்ந்ததும், அவர் விறகுகட்டைகளை அடுக்கித் தனது மகனை அதன்மேல் கிடத்தி வெட்டிப் பலியிடுமாறு வாளை ஓங்குகிருர். உடனே ஓர் வானதூதன் தோன்றி, வாள்தாங்கிய அவர்கரத்தைப் பிடித்து, "ஆபிரகாமே! ஆபிரகாமே! உனபிள்ளைமேல் கையோங்கி ஒன்றுஞ் செய்யாதே; நீ தெய்வ பயமுடையவனுய் நம்மைப்பற்றி உனது ஏகபுதல்வனென்றும் பாராமல் அவனைப் பலிகொடுக்கத் துணிந்தாய்என்று நாம்இப்போது அறிந்திருக்கிறோம்" என்ருர்.

இவ்வாறு தாய்மார் தங்கள் மக்களைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தால்,அந்தக்காணிக்கையே அவருக்குச்சொல்லமுடியாத மகிமையைத் தருகிறது. தாய்மார் தங்கள் பிள்ளைகளை முன்சொன்னவாறு காணிக்கையாக்கியபின் அவர்கள்இருதயத்தில் தேவஅழைத்தலின் விதை விழத்தக்கதாய் முந்த முந்த அவர்களைத் தெய்வபயத்தில் வளரச்செய்யவேண்டும். தெய்வ பயத்தை வயதுக்குத் தக்காப்போல் சன்னஞ் சன்னமாய் ஊட்டிவரவே, அவர்கள் ஞானஸ்நானத்தில் பெற்றுக்கொண்ட தேவஇஷ்டப்பிரசாதத்தை ஒருபோதும் இழந்து போகமாட்டார்கள். அத்துடன் அவர்கள்வயதுக்கேற்ற புண்ணியக்கிரிகைகளைச்செய்யத் தாய்மார் இடையருது அவர்களைத் தூண்டிவர வேண்டும். புண்ணியக் கிரிகைகள்என்ருல் ஒருநாள் இரண்டுநாளைக்குச் செய்வதல்ல. அவைகளை விடாமற் செய்துவர அவர்களைப் பழக்க வேண்டும். தேவஅழைத்தலின் விதையைத் தங்களுடைய மக்களின் இருதயத்திலே சர்வேசுரன் விதைக்கவேண்டுமானுல், பிள்ளைகளுக்குப் புண்ணியங்களைச்செய்யக் கற்றுக்கொடுப்பது அத்தியாவசியம். கொஞ்சம்வயதானபிறகு தாய்மார் அவர்களை முற்ருகக் கண்காணிக்கமுடியாதாகையால், அவர்களைக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும். பாடசாலைகளிலே படித்துவரும்காலத்தில் தான் சாதாரணமாகப் பிள்ளைகள் தேவஅழைத்தலைப் பெறுகிருர்கள். சிற்சில சமயங்களிலே அவர்கள் உலககல்வியை முடித்து உத்தியோகம்வகிக்கும் காலத்தில் தேவஅழைத்தலின் குரல் சப்தத்தைக் கேட்கிருர்கள். பிள்ளைகள் தங்களுக்குத் தேவ அழைத்தல் இருக்கிறதென்று முதன்முதலாகப் பெற்ருேருக்கு அறிவித்ததும், அவர்களை உற்சாகப்படுத்தியும், ஆத்துமகுருவிடஞ் சொல்லும்படி செய்தும் நாளுக்குநாள் அந்த ஆசையை வளரச்செய்ய வேண்டும்.

உலகபொருட்களை அபரிமிதமாகக் கொண்டிருக்கும் பெற்ருேரே! "உங்கள் பொருளைக் கொண்டு மோட்சத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்; உங்கள் பொக்ஷங்களை மோட்சத்தில் சேர்த்துவையுங்கள்" என்று நமது ஆண்டவர் வசனித்திருப்பதுபோல, தேவஅழைத்தலைப்பெறும் ஏழைமக்களுக்கு உதவிபுரிய முன் வாருங்கள்! உங்கள் பொருளுதவியைக் கொண்டு ஒருவர் குருவானுல் உங்கள்குடும்பத்திற்கு இது ஓர் பெரும் ஆசீர்வாதம்அல்லவா? அல்லும்பகலும் அவர்செய்யும் செபங்களில் பங்கடைவீர்கள். அவரால் மனந்திருப்பப்படும் எண்ணிறந்த ஆத்துமங்களுக்கு நீங்களே காரண கர்த்தாக்களாய் இருப்பீர்கள்!

நம்மால் ஆனதையெல்லாம் செய்வோமேயாகில், எமது நாட்டில் அநேகர் குருமாராகவும், கன்னியர்களாகவும்வந்து சர்வேசுரனின் மகிமை நாளுக்குநாள் அதிகரிக்க, அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

— S. A. S.

# குழந்தைகளும் கிருமிப்பூச்சியும்

— எம். ராதாபாய் —

பொதுவாகக் குழந்தைகள் நோய்வாய்ப்படுவதற்குப் பெற்ருேரின் கவனக்குறைவே காரணமாகும். முக்கியமாகத் தாய்மார் சிறிதுஅசிரத்தையாய் இருந்தால் குழந்தைகள் அடிக்கடி சுகவீனமடைவதைக் காணலாம். சாதாரணமாக வீட்டில் உபயோகிக்கப்படும் தண்ணீரும், சமையல்செய்ய உபயோகிக்கப்படும் மாக்கறிவகைகளும் சுத்தமாயிராவிடின், அவற்றிலுள்ள விஷக்கிருமிகள் குடும்பத்தினருக்கு— குறிப்பாகக் குழந்தைகளுக்குப் பல்வேறுநோய்களை உண்டாக்கும்.

இவ்விதம் குழந்தைகளைத்தாக்கும் நோய்களிலே கிருமிப்பூச்சிகளால் உண்டாகும்நோய் மிகக்கொடியது. இந்நோய்கண்ட குழந்தை நாளுக்கு நாள் மெலியும். இராவிலே நித்திரை செய்யும்போது பற்களை கறுகறெனக் கடித்துக்கொள்ளும். பசியின்றிஅவதிப்படும். உடம்பிலுள்ள இரத்தத்தைக்குடித்து உயிர்வாழும் கிருமிப்பூச்சிகள் குழந்தையின் வயிற்றில் பெருகுமானல, குழந்தை இரத்தமின்மையால் பாதிக்கப்படும். உடம்பிலே இரத்தமில்லாவிட்டால் குழந்தையை எந்தநோயும் எளிதில்தாக்கும்.

போதிய சத்துள்ளஉணவு ஊட்டப்படாத குழந்தைகளையே கிருமிப்பூச்சிகள் அதிகமாகத்தாக்குவதாக வைத்தியநிபுணர்கள் கூறுகிருர்கள். அசுத்தமான தண்ணீரிலும், இடங்களிலும் பசளி, வல்லாரலபோன்ற பச்சைக்கீரைகளிலும், கனிவர்க்கங்களிலும் கிருமிப்பூச்சிகள் பெருகுகின்றன. அதனுற்ருன் தண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறியபின்னர் குடிக்கவேண்டுமென்றும், பச்சைக்கீரைகளையும், ஏனைய மாக்கறிவகைகளையும் நன்ருகக்கழுவிச் சமையல்செய்ய வேண்டுமென்றும் புத்திகூறப்படுகிறது. அசுத்தமானதண்ணீரைக் குடிப்பதாலோ, அல்லது அசுத்தமான மாக்கறிவகைகளை உண்பதாலோ வயிற்றினுள்பிரவேசிக்கும் கிருமிப்பூச்சிகள் பின்னர் இரத்தக்குழாய்கள்வழியாக இருதயத்துக்கும், சுவாசப்பைக்கும், தொண்டைக்குஞ்சென்று பெருகுகின்றன. இரத்தத்தைக் குடித்துவளரும் கிருமிப்பூச்சிகள் பல்வேறுவிதமான வயிற்றுக்கோளாறுகளை உண்டாக்குகின்றன.

குழந்தைகள் பசியில்லாமலும், அசமந்தமாகவும், சுறுசுறுப்பில்லாமலும் இருந்தால் அவர்களைக் கிருமிப்பூச்சிகள் தாக்கியுள்ளனவென்று தெரிந்து கொள்ளவேண்டும். இந்தஅறிகுறிகள் காணப்பட்டதும் அவர்களைத் தகுதிவாய்ந்த வைத்தியரிடம் கொண்டு போய்க்காட்டித் தக்கமருந்து வாங்கிக் கொடுத்தால் கிருமிப்பூச்சிகளின் தொல்லையை ஒழித்துவிடலாம். ஆனுல், அதேசமயத்தில் பெற்ருரின் கவனக்குறைவால் கிருமிப்பூச்சிகள் மறுபடியும் குழந்தைகளைத் தாக்காவண்ணம் தகுந்த சுகாதாரமுறைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

மலசலகூடங்கள் சுகாதாரமற்றமுறையிலே அமைந்திருக்கும் இடங்களில் வசிப்பவர்களுக்குக் கொளுக்கிப்புழுநோய் உண்டாகிறது. இப்புழு வெறுங்காலுடன் செல்பவர்களின் பாதத்தில்ஒட்டிக்கொண்டு, பின்னர் சருமத்தின்வழியாக இருதயம், சுவாசப்பை, தொண்டைமுதலிய உறுப்புக்களுக்குச்சென்று இரத்தத்தைக்குடித்துப் பெருகும். இந்நோய்கண்டவர்கள் பசியில்லாமல் பலவித வயிற்றுக்கோளாறுகளால் பீடிக்கப்படுவதுடன் சோகையினுல் முகம்வெளுத்து நடக்கச்சக்தியின்றியும், வேலைசெய்ய மனமின்றியும் இருப்பார்கள். இவர்களும் தகுந்த வைத்தியரிடம்காட்டிச் சிகிச்சைசெய்யவேண்டும்.

---

● செக்கோசிலவக்கிய பிரயாணிகள் விமானம்ஒன்று சமீபத்திலே அந்நாட்டின் கிழக்கு எல்லையிலுள்ள ரற்ருமலையிற்போய் மோதுண்டகாரணமாக விபத்துக்குள்ளானபோது அதிலே சென்ற பிரயாணிகளில் 22பேர் கொல்லப்பட, 4பேர் சேவமோசத்துக்குரிய காயமடைந்தார்கள். சோவியற்ருஷியாவின் எல்லையையடுத்துள்ள பொறிஸ்காஎனுமிடத்திலே இந்தவிபத்து நிகழலாயிற்று.

● ஆஸ்திறேலியாவிலே ஓர் பல்வைத்திய கேர்ஸான செல்வி மேரி லீ எனும்மாது உலகஞ்சுற்றிவரும் வழியிலே சென்ற சனிக்கிழமை கொழும்பு கண்டு செல்லுகின்ருள். மிதமிஞ்சியவிதமாகச்சீனிபாவிப்பதே பற்கள்கெட்டுப்போகக் காரணமென்றும், பெரும்பாலான ஆஸ்திறேலியமக்கள் சிதைவுற்றுக் கெட்டுப்போன பற்களாலே வெகுவாகக் கஷ்டப்படுகிருர்களென்றும் இவள் கூறுகின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுக்குண்டும் உலகசமாதானமும்

சமீபத்திலே இந்தியபிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வானொலியில் இந்தியமக்களுக்கு உலக நிலைமைகுறித்து விடுத்த செய்தியில்: ருஷியா அணுக்குண்டுப் பரீட்சை நடத்தியதையிட்டுக் குறிப்பிடலாயினர். "இன்று ருஷியா அணுக்குண்டுப்பரீட்சை நடத்துகிறது; நாளை பசிபிக்சமுத்திரத்தில் அமெரிக்கா மற்றோர் அணுக்குண்டுப்பரீட்சையைநடத்தும்; இப்படியாக உலகையே அழிக்கக்கூடிய அணுக்குண்டுகளைப்பரீட்சை செய்வதில் இப்பெரும் வல்லரசுகள் இரண்டும் ஈடுபட்டுக்கொண்டிருந்தால் உலகசமாதானம் ஏற்படுமா? உலக சமாதானக் கொள்கைக்கும், உடனிருந்துவாழும் கொள்கைக்கும் இதுவழியாகுமா? இவ்விருபெரும் வல்லரசுகளுக்கும் உலக சமாதானமென்ற வார்த்தைகளை உச்சரிக்கத்தானும் யோக்கியதை யுண்டா?" என்னும் பொருள்பட அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அதேசமயத்தில் அமெரிக்காவில் ஜனதிபதி ஐஸன்ஹாவர் அவர்கள் தமது அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விடுத்துள்ள செய்தியிலே: தமதுநாட்டின் முப்படைகளையும் பெருக்கப்போவதாகவும், நேசநாடுகளுக்கு இராணுவஉதவி அளிக்கப்போவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். உலகசமாதானத்துக்கு இவ்வித நடவடிக்கை அத்தியாவசியமென்றும் அதற்கு நியாயஞ்சொல்லியிருக்கிறார்.

அதேசமயத்தில் பிரித்தானிய பிரதமர் சேர் அந்தோனி ஈடன் அவர்கள் யோக்ஷயரில்நடைபெற்ற கன்ஸர்வேற்றிவ்கட்சிக் கூட்டத்தில் பேசியபோது: அணுக்குண்டுகள் போன்ற அணுசக்திஆயுதங்களே எதிர்கால யுத்தத்தைத் தடுக்கவல்லனஎன்று சாற்றியிருக்கிறார். உலகசமாதானப் பிரியர்கள் இந்த அமெரிக்கதலைவரும், பிரித்தானிய தலைவரும் ஆயுதமுஸ்திப்பில் உலக சமாதானத்தைச் சிருட்டிக்க முயலுவதைக்குறித்து ஆச்சரியப்படாதிருக்கமுடியாது. இவ்வாறு உலக சமாதானத்துக்கு உலைவைக்கக்கூடிய வல்லரசுகளின் கெடுபிடியுத்தம் கூடிக்கொண்டு போகிறதேயொழியக் குறைந்தபாடில்லை.

பிரித்தானிய பிரதமர் யோக்ஷயரில் அதே கூட்டத்தில்தானே பேசியபோது: மத்தியகிழக்கு மண்டலநிலை குறித்துக் கவலைதெரிவித்திருக்கிறார். மத்தியகிழக்குமண்டலத்தில் எழுந்துகொண்டிருக்கும் தகராறுகளும், சச்சரவுகளும் உலகயுத்தமாக வெடித்துவிடக்கூடிய அபாயகரமான நிலையில் இருக்கின்றனவென்று அவர் கூறியிருக்கின்றார். ஆனால், மத்தியகிழக்கு மண்டலத்தில் மூண்டுவரும் தகராறுகளுக்கும், சச்சரவுகளுக்கும் வல்லரசுகளின் போட்டிகளே காரணம்என்பதை உலகம் நன்கறியுமன்றே! ஒருபுறம் பிரித்தானிய பிரதமர் மத்தியகிழக்கைக்குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், மற்றொருபுறம் அமெரிக்க ஜனதிபதிக்கு இப்பொழுதுதான் ஆசியாவைக் குறித்துக் கவலை பிறந்திருக்கிறது. ருஷிய தலைவர்களின் ஆசியவிஜயத்துக்குப்பின் அமெரிக்க தலைவருக்கு இவ்விதகவலை பிறந்திருப்பதால், இது வல்லரசுகள் போட்டியில் பிறந்தகவலைஎன்றும், இயல்பாகப் பிறந்த கவலைஅல்லவென்றும் உத்தேசிக்க இடமுண்டல்லவா? எவ்விதத்தும் இந்தக்கவலை சுயநலபோக்கற்றதாயிருப்பின் ஆசியமக்கள் அதை ஒருபொருட்டாகக் கருதலாம். அமெரிக்க—பிரித்தானிய தலைவர்கள்சந்தித்து உலகநிலை பற்றி ஆலோசிக்கும் இந்தவேளை இவ்விரு கவலைகள்பற்றியும சிந்திப்பார்கள் என்பது நிச்சயம்.

---

# பிரதமரும் கம்யூனிஸமும்

"ஐக்கியதேசியக் கட்சியினரிடையே நிலவியஒற்றுமையானது மாத்தறையிலிருந்து கம்யூனிஸ்தகட்சியை அப்புறப்படுத்துவதற்குப் பெரிதுஞ்சாதகமாயிற்று. இன்று தமதுபோர்முனையைக் கம்யூனிஸ்தகட்சியினர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றிவிட்டிருக்கின்றனர். அங்கு மொழிப்பிரச்சினை அவர்களின் பிரசாரத்துக்கு இடமளிக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒவ்வொருதொகுதியிலும் தங்கள் அபேட்சகர்களைத் தேர்தலுக்குநிறுத்தக் கம்யூனிஸ்தகட்சியினர் திட்டமிட்டுள்ளனர்" என்று சமீபத்திலே மாத்தறைப் புதியநகரசபை தமக்களித்த விருந்தின்போது சொற்பொழிவாற்றிய பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கூறலாயினர். மேலும்அவர் கூறியதாவது: "வெளிநாடுகளிலிருந்து கம்யூனிஸ்த கட்சியினருக்குக் கிடைத்துவரும் உதவிகளை எல்லாம் தடுத்துவிட்டால் நாம் இந்நாட்டில் கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடலாம். இதனைக் கருத்திற்கொண்டுதான் நான் பிரதமராக வந்தகாலந்தொட்டுக் கம்யூனிஸ்த நூல்களை இறக்குமதிசெய்வதற்குத் தடைவிதித்தும், இறக்குமதி செய்யப்பட்டனவற்றை எதிர்த்தும் அவர்களின் வருவாய்க்குரிய வழிவகைகளையெல்லாம் தடுப்பதற்கு வேண்டிய கடும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டும் வரலானேன்.

"இப்பொழுது போதிய நிதியின்றிக் கம்யூனிஸ்த கட்சியினர் மிகவும் கஷ்டப்படுவதினால் தாங்கள் வைத்திருந்த தெலிபோனைத் துண்டித்தும், மேலதிகமாக வைத்திருந்த உத்தியோகஸ்தர்களைப் பதவிநீக்கம்செய்தும் வருகின்றனர். இந்தநாட்டில் கம்யூனிஸ்தகட்சியின் ஆதரவாளர்கள் தங்கள்பணத்தின் ஒருபகுதியைக் கட்சிக்குக் கொடுத்துதவக்கூடிய அவ்வளவு கட்சிவிசுவாசம் உடையவர்களன்று. அவர்கள் தங்களுக்கு இலவசமாகக் கிடைப்பனவற்றைக் கொண்டுதான் தழைத்தோங்க முயல்பவர்கள்."

பஞ்சசீலத்தினைப் பற்றியும், ஒன்றுகூடிவாழும் கொள்கைகளைப்பற்றியும் உணர்த்தும்நோக்கத்துடனேயே பண்டிதநேரு அவர்கள் ருஷிய தலைவர்களை இந்தியாவுக்கு வரவழைத்தார். ஆனால், அத்தலைவர்கள் மஸ்கோவுக்குத் திரும்பியதும் இக்கொள்கைகளுக்கு முற்றும் முரணான அபிப்பிராயங்களையே தெரிவித்தார்கள்.

கம்யூனிஸ்தர்களைத் தோற்கடிக்கும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டவர் மேஜர் தர்மபாலா அவர்களே. ஹக்மனைத்தொகுதியில் அவர் திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கவைத் தோற்கடித்த அன்றே இப்படலம் ஆரம்பமாயிற்று.

# சித்திர எழுத்தாசிரியர் வண. எச். ஹெருஸ் சுவாமிகள்

—: பண்டிதரூபின் வர்மா :—

பம்பாய்நகர சரித்திர ஆராய்ச்சித்துறைத் தலைவரும், அறத்திற்சிறந்த துறவறத்தவரும், ஸ்பெயின்நாட்டில் பிறந்தவருமான சித்திரஎழுத்தாசிரியர் சங்கைவாய்ந்த ஹென்றி ஹெருஸ்சுவாமிகள் 14-12-55-இல் தமது அறுபத்தேழாவது வயதில் "குடம்பை தனித்திருப்பப் புட்பறந்ததுபோல்" தெய்வக் திருக்கழல் சேர்ந்தார். இவர் பாஷைகள் பதினான்கு கற்றுவிளங்கிய பேரறிஞர். இன்னவர் ஆபுகானிஸ்தானின் புராதனக் கல்வெட்டுகளை ஆராய்ந்து ஓர் அரும்பெரும்நூலை எழுதியுள்ளார். அதற்காக அந்நாட்டரசன் இவர்க்கோர் செம்பொற் பதக்கத்தை மனமுவந்து நல்கினன். சுவாமிகள் புதைபொருள்ஆராய்ச்சியில் மிகவும் அவர்க்கொண்டவர். கிறீஸ்துபெருமான் பிறப்புக்கு 5000ஆண்டுகளுக்கு முன்னுள்ள சிந்துவெளிப் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு மஞ்சுதரு, அறப்பா, சங்குதரு, லொஞ்சுதரு, தஞ்சுதரு முதலிய பட்டினங்களை நேரிற்சென்று தரிசித்து ஆயிரத்தெண்ணூற்றிற்கு மேற்பட்ட சித்திரலிபிச் சிலாசாசனங்களுக்கு அரும்பொருள் கூறினர்.

சிந்துவெளியில் பண்டுவாழ்ந்த பெருமக்கள் "தமிழ் மக்களே" என்றும், அம்மக்களுள் ஆதியில் "உலகோம்பல்" புரிந்தார், "மீனவர், பரவர்" என்னும் ஒரேகுலத்தைச்சார்ந்த இருபிரிவினர் என்றும், மீனவர்ஆண்ட நிலப்பரப்பிற்கு "மீனுடு" என்றும், பரவர்ஆண்ட நிலப்பரப்பிற்குப் "பரவர் நாடு" என்றும் பெயருண்டாயின என மஞ்சுதரு உருவெழுத்துக் கல்வெட்டுகளைக் கொண்டு இவர் எடுத்துரைத்தார்.

(Vide Further excavation at Mohanji-Daro by Revd. Fr. H. Heras—The New Review No. 49, Vol. IX Jan. 1937)

இந்த உருவெழுத்தென்னும் சித்திர எழுத்துக்களை வாசிக்க வல்லுனர், இந்நாள் இச்சுவாமிகளையன்றி வேறே எவருமிலர் எனில் மிகைபடக்கூறியதன்று.

"காணப்பட்ட உருவமெல்லாம்
மாணக்காட்டும் வகையைநாடி
வழுவில்ஒவியன் கைவினைபோல்
எழுதப்படுவது உருவெழுத்தாமே."

என "யாப்பருங்கல விருத்தி" நூலோர் தீட்டியுள்ளார். இவ்வெழுத்தினின்றே தற்போது நாம் வழங்கும் "வரி" எழுத்து உண்டானதென்பர், அகத்தியர், தொல்காப்பியருங்காணாத தமிழ்ச்சொற்பிறப்பு ஒப்பியல்அகராதி கண்ட நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர். இந்நல்லூராரைத் தரிசிக்கச் சில ஆண்டுகளுக்குமுன்னர் ஹெருஸ்சுவாமிகள் இந்தஈழவளநாட்டிற்கு விஜயஞ்செய்தனர். ஈழநாட்டின் பழையநாணயங்களைக் கண்டனர். அந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள, மஞ்சுதருச் சித்திரஎழுத்துடன் சம்பந்தமுடையவை என உறுதிப்படுத்தினர். கேகாலைக்குச் சில கல்லுக்கப்பால் இருக்கும் குகையில் சிந்துவெளி நாகரிகத்திற்குச் சம்பந்தமுடைய சித்திர எழுத்துகளை [illegible]உணர்ந்தமைய்தினர்.

தமிழ் மக்கள்மேல் அன்புகொண்ட முத்தொழிற்கடவுள் இத்தாலி தேசத்திற்பிறந்த தமிழ்க்கலையில்வல்ல "வீரமாமுனிவ"ரைத் தமிழகம் சிறக்க முன்னாள் தந்தருளினர். அச்சருவ வல்லபகடவுளே இந்நாள் மாந்தர் எவராலும் வாசிக்கஇயலாத சிந்துத் தமிழ்ச் சித்திரலிபிகளை வாசிக்க வல்லுனராகிய ஸ்பெயின்தேயத்திற்பிறந்த "ஹெருஸ்" சுவாமிகளைத் தமிழ்மக்களிடை விடுத்தார்.

இச்சித்திர எழுத்தாசிரிய குரவரைப்பற்றிப் பிரபுத்த பாரத ஆசிரியர் ஸ்ரீ சுவாமி விபுலானந்தர் அவர்கள் "உலகபுராணம்" என்ற கட்டுரையில் பின்வருமாறு புகழ்கின்றார்:

"பம்பாய் நகர்ப் பல்கலைக்கழகத்துச் சரித்திரஆராய்ச்சித்துறைத் தலைவரும், கத்தோலிக்க கிறீஸ்தவ சமயக்குரவரும்ஆகிய வணக்கத்துக்குரிய எச். ஹெருஸ் சுவாமியார் (Revd. Fr. Heras) தமிழரது வரலாற்றினைப் பெருக ஆராய்ந்து, நூல்கள்வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் வெளியிட்டிருக்கின்றார். ஆரிய நாகரிக முதன்மையை எவ்வாற்றாலும் நிலைநிறுத்த வேண்டுமென்னும் விருப்புடைய ஒருசாரார் இவர்க்கு இன்னல்விளைக்க முனைந்து நிற்பது இவரது கல்விநிறைவையும், நடுவுநிலைமையையும் தெளிவுறக்காட்டுகின்றது. இவர் ஸ்பெயின்தேசத்திற் பிறந்தவர். துறவற ஒழுக்கமுடையவர். ஆதலினாலே, ஆரியர் பக்கமோ, திராவிடர்பக்கமோ சாராது நடுநின்று உண்மைகூறும் ஆற்றல்வாய்ந்தவர்..."

இவ்வாறு ஆன்றோர் மதிப்புரை பகரும் ஆராய்ச்சிப் பெருந்துறைக் கலைவல்லோனின்மறைவு, செந்தமிழ் நாடென்னும் திருமங்கைக்கோர் பெருங்குறைவு என்க.

---

● கலம்பியாவின் தலைப்பட்டணமாகிய பொகொட்டாநகரிலே ஜப்பானியஸ்தானிகர் காரியாலயத்தின் காரியதரிசியாய் இருந்துவருகிறவரான திரு. மினோறு ரகாற்ரு அவர்களும், அவர் பாரியார் ஹிசாக்கோவும் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்திருக்கின்றார்கள்.

● நாளாந்த பூசைச்செபப்புத்தகம் முதன்முதலாக ஜப்பானியபாஷையிலே ரோக்கியோநகரிலுள்ள சலேசியன்சபை அச்சகத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது. முதலாவதுவாரத்தில் ஆயிரம்புத்தகங்கள்வரை விலைப்படலாயின. ஜப்பானியர் ஒருவரின் துணையோடு வண. பிறெடறிக் பார்பரேசுவாமியார் இதனை ஜப்பானிய பாஷையில் மொழிபெயர்த்தார்.

● வருகிறபங்குனிமாதம் 2-ந்திகதி வரப்போகின்ற பரிசுத்தபாப்பரசரின் 80-வது பிறந்தபெருநாள் ஞாபகார்த்தமாக இத்தாலிய தொழிலாளர்களின் கிறீஸ்துவசங்கமானது ரோமாபுரியிலே "தொழிலாளியான கிறீஸ்துநாதர்" பேரால் ஓர்கோவிலைக்கட்டுவதற்கு நிதி சேகரித்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the estate of the late Joseph Ferdinand of Jaffna Town.

Deceased.

Testamentary Jurisdiction No. 86.

Arokiam widow of Joseph Ferdinand of Jaffna Town.

Petitioner.

Vs.

1. Wilfred Ferdinand
minor 2. Alfred Ferdinand
do 3. Philip Ferdinand
do 4. Stella Ferdinand and
do 5. Rubert Ferdinand all of Jaffna Town.

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skanda Rajah, Esquire, District Judge, Jaffna on the 23rd day of September, 1955 in the presence of Mr. V. A. Moses, Proctor for the petitioner and the affidavit of the petitioner dated 30th day of April 1955 having been read:

It is ordered that the abovenamed 1st respondent be appointed guardian ad litem of the minors the 2nd to 5th respondents and that the petitioner is declared entitled to have letters of administration of the estate of the abovenamed deceased and the same issued to her accordingly unless the respondents or others interested shall on or before the 31st day of October 1955 appear before this Court and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 23rd day of September 1955.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

31-10-55

Time to show cause to the contrary is extended to 28-11-55.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

28-11-55

Time to show cause to the contrary is extended to 13-2-56.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

## லூர்துமாதா திருநாள்
### மாதகல்

வழமைப்பிரகாரம் லூர்துமாதாதிருநாள் மாதகல் கெபியில் 11-ந் திகதி கொண்டாடப்படும். பிற்பகல் 6-30 மணியளவில் சுற்றுப்பிரகாரம் நடைபெறும்.

## நல்மரண அறிக்கை

யாழ்ப்பாணம் ஒல்ட்பாக் ரோட்டில் வசிக்கும் திரு. சின்னப்பு - அருளானந்தம் நல்லையா அவர்களின் அருமைப்புதல்வனும், கொழும்பு, அரசினர் மின்சார இலாகாத் தலைமைக்கந்தோரில் லிகிதராகக் கடமையாற்றும் திரு. அ. ந. யேசுதாசன் அவர்களின் அன்புடைச் சகோதரனுமாகிய செல்வன் யோசேப்பு அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை (28-1-56) காலை ஒருமணியளவில், சடுதியாக ஏற்பட்ட நோயினாற் பீடிக்கப்பட்டுச் சிகிச்சையிற் குணமுறாது, மரணத்திரையில் மறையலாயினர். இவரதுசரீரம், அடுத்தநாள் சனிக்கிழமை (29-1-56) காலை அழகிய பேழையில் வைக்கப்பட்டு, அர்ச். கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் உதவிக்கட்டளைக்குரவராம் வண. B. சூசைப்பிள்ளை, சுவாமியவர்களால் திக்கதேம்பாட, அர்ச். அந்தோனியார்கூட்ட அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர், ஆசிரியர், உறவினர், சிநேகிதர், மற்றும் பலர் பெருந்தொகையாகப் புடைசூழ ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, ஆசனக்கோவிற் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. மரிக்கும்போது இவரதுவயது இருபது. இவரை இழந்து பரதவித்துவருந்தும் இவரது பெற்றோர் உடன்பிறந்தார், சுற்றத்தார், சிநேகிதர் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். இதைக் கண்ணுறுவோர் இவரது ஆன்மசாந்திக்காக வேண்டிக் கொள்வார்களாக. ஆன்மா நித்தியஇளைப்பாற்றியை அடைவதாக. (அன்பன்)

39, ஒல்ட்பாக் ரோட்,
யாழ்ப்பாணம்.

# தேவநற்கருணை பெறுமுன் உபவாசம்

### இளக்காரங்கள்

குறிப்பு:— சாதாரண தண்ணீர், வெந்நீர் எந்நேரமும் குடிக்கலாம்.

| இளக்காரக் காரணங்கள் | குடிக்கலாம் | தே. ந. பெறுமுன் நேரம் | ஆ. கு.* ஆலோ. |
|---|---|---|---|
| களைப்பான வேலை (1) | மஸ்தில்லாப் பானம் | ஒருமணித்தியாலம் | தேவை |
| கோவிலுக்கு வெகுதூரம் (2) | மஸ்தில்லாப் பானம் | ஒருமணித்தியாலம் | தேவை |
| நற்கருணை பெற்றபின் (3) உடன்சாப்பாடு இல்லை | மஸ்திலலாப் பானம் | ஒருமணித்தியாலம் | தேவை |
| 9 மணி. பின நற்கருணை | மஸ்தில்லாப்பானம் | ஒருமணிததியாலம் | தேவை |
| சுகவீன காரணம் | 1. ம. இ. மருந்து, பானம், போசனம்<br>2. ம. இ. பானம் | எந்நேரமும்<br>எந்நேரமும் | தேவை<br>தேவை |
| பின்னேரப் பூசையில் தேவநற்கருணை | 1. வழக்க. சாப். (4)<br>2. ம. இ. பானம் | மூன்று மணித்.<br>ஒருமணித்தியாலம் | தேவை<br>யில்லை |

குறிப்புகள் :—

(1) இராப்பகல் மாறித் தொழிற்சாலைகளில் வேலை, எற்றுமதி இறக்குமதி வேலை, அரசாங்கசேவை, கர்ப்பவதிகளும், வீட்டில் நீடிய அவசிய வேலையுள்ளவர்களும்.

(2) ஒன்றேகால்மைல் கால்நடை, அல்லது வாகனங்களில் அதேவித கஷ்டத்துடன்.

(3) கோவிலிலிருந்து பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டிய பிள்ளைகள், ஆசிரியர்கள், அப்பேர்ப்பட்ட காரணங்களுள்ள தொழிலாளர்களும்.

(4) இப்போசனங்களுடன் உவையின், பியர் பாவிக்கலாம். மஸ்துள்ள பானம் விலக்கு.

* ஆ. கு. :— ஆத்தும குருவின் ஆலோசனை என்று வாசிக்கவேண்டும்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயராசாவின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் உதவியாலும், அர்ச். அந்தோனியார், சஞ்சூசையப்பர், சம்பேதுருவானவர்இவர்களின் மன்றாட்டின்உதவியாலும் எனதுமகனுக்கு 6 வருஷகாலமாக இருந்தகொடிய நோய் குணமானதிற்கும், ஊதாரியாய்த் திரிந்தபிள்ளை என்னிடம்வந்து சேர்ந்ததிற்கும், அடியேனின் ஏழைக்குடும்பம் இற்றைவரையிலும்காப்பாற்றப்பட்டதிற்கும் நன்றியாகஇவர்களின்நாமம்நாளுதிக்கிலும் பிரபல்யமடையவிரும்பிப் பாதுகாவலனில் பிரசுரஞ்செய்கிறேன்.

சூடாரப்பு, எ. கை. பெ. ஆனாசிப்பிள்ளை.

புதிதாகக்கட்டப்பட்ட அமெரிக்க ஜெற் போர்விமானம்ஒன்று மணித்தியாலம் ஆயிரம்மைலுக்கு அதிகமான வேகத்தில் பறந்துசென்றதாக வாஷிங்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இது ஒருமுறை மணித்தியாலம் ஆயிரத்துநூறுமைல் வேகத்திலும், சுமார் ஆறுமுறை மணித்தியாலம் ஆயிரத்து ஐம்பதுமைல் வேகத்திலும்பறந்ததாம்.

## பிரமாண்டமான புத்தர்சிலை

அனுராசபுரப் புதியபட்டினத்திலே விவேகராமா விகாரைவளவிலே 132 அடி உயரமுள்ள பிரமாண்டமான புத்தர் சிலைஒன்றை அமைக்கும் வேலைக்குக் காணி-காணிஅபிவிர்த்தி மந்திரியாரான திரு. பி. பி. புலங்குலம திசாவையாலும்,மற்றும்சிலராலும் சென்ற சனிக்கிழமை காலை அத்திவாரக் கற்கள் நாட்டப்படலாயின. உட்கார்ந்தபடியே அமைக்கப்படவிருக்கும் இந்தப் புத்தர்சிலையானது கீர்த்திவாய்ந்த ஜெற்றவனராம மலைப்பாறையில் செதுக்கப்பெற்றுள்ள புத்தர் சிலையின் மாதிரியாயிருக்கும். இதனை அமைக்க ஏற்படவிருக்கும் செலவுமதிப்பு 1,50,000 ரூபாவாகும். புதிய பட்டினப் புத்தஇளைஞர் சங்கத்தாலேயே இது அமைக்கப்படும்.

## அடுத்தபடியாகப் புத்தசமயம்

"இலங்கைவாசிகளில் பெரும்பான்மையினர்புத்தசமயத்தினராய் இருப்பதைமுன்னிட்டு ஏனையசமயங்களுக்குப் பங்கம்ஏற்படாதவகையிலே இலங்கையின் அரசாங்கசமயமாகப் புத்தசமயத்தை ஆக்குவதற்கு அரசாங்கத்தால் உடன்நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென இச்சபை அபிப்பிராயப்படுகின்றது" என்ற ஓர்பிரேரணையை மவனெல்லைப்பிரதிநிதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவருமான திரு. சி. ஆர். பெலிகம்மனஎன்பவர் இம்மாதம் 8-ந்திகதியன்று கூடவிருக்கும் சனப்பிரதிநிதிகள்சபைக்கூட்டத்தில் எடுத்தாளவிருக்கின்றார்.

## வெண்பொன் யூபிலிவிழா

வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியார் அவர்களின் வெண்பொன் யூபிலிவிழாக்கொண்டாட்டம் 1956-ம் ஆண்டு மாசிமாதம் 4-ந் திகதி சில்லாலை அர்ச் ஆரோக்கியமாதா தேவாலயத்தில் நடந்தேறும். அச்சமயம் இனசனரும், அன்பர்களும், சிநேகிதர்களும் சமுகம்கொடுத்து விழாவைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

### நிகழ்ச்சிகள்

காலை 7-00 மணிக்கு : பாடற்பூசையும், தோத்திரகீதமும்.

காலை 10மணிக்கு : யூபிலிவிழா உபசாரணை.

நீ. ஜேம்ஸ்,
கொண்டாட்ட உபசபைக்காரியதரிசி.

## தலைமைஆசிரியர் தேவை

செட்டிகுளம் மிசாமைச் சேர்ந்த பதிவுசெய்யப்படாத கட்டை அடம்பன் புதிய கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைக்குப் பத்துவருடப் படிப்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத (Trained or un-trained) 1-ம் வகுப்புத் தராதரப் பத்திரம் உள்ள தலைமைஆசிரியர் தேவை. கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டியது:

The Actg. Gen. Manager,
R. C. Schools.

Jaffna, 11-1-56

## கவனிப்பு

எமது "பாதுகாவலன்" சந்தாதாரர்களாய் நவாலி, மானிப்பாய், பண்டத்தெருப்பு, சில்லாலை, இளவாலை, காங்கேசன் துறை, ஊறணி, மயிலிட்டி, வசாவிளான், அச்சுவேலி ஆதியாம் இடங்களில் உள்ளவர்களுக்கு இதுகாறும் ஆள்மூலம் பத்திரிகை கொடுப்பித்துவந்தோம். இபபோது அப்படிக் கொடுப்பிக்க வசதியின்மையால் வருந்துகிறோம். எனவே, இனிமேல் தபால் மூலமே பத்திரிகை அனுப்பிவைக்கப்படும். ஆகவே, சந்தாதாரர்சகலரும் தங்களின் தற்போதைய விலாசத்தைத் தயவுசெய்து மேல்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படியாகக் கேட்கப்படுகிறார்கள்.

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த தேவதாயாரின் இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். சூசையப்பர் (பரிசுத்த சதாசகாயமாதா) இவர்களின்உதவியினாலும் நான்கேட்டுக் கொண்ட மன்றாட்டுக்கள்யாவும் அனுகூலமாயின. இவர்களின்நாமம் என்றும்புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

அ. மேரிலூர்த்தம்மா தவமணி,
பழயமாத்தளன், முல்லைத்தீவு.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 2-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன் அனுபந்தம் 2—2—1956

# புனிதவீரர்

## அண்ணு சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

வீணை ஒன்று வாங்கச் சாய்ப்புக்குப் போனேன். அங்கு பல வீணைகளிருந்தன. அத்துடன் "மனப்பக்குவத்தைத் தவிர மற்றதெல்லாங் கிடைக்கு" மென்று ஓர் விளம்பரமும் ஒட்டியிருந்தது.

உங்கள் படிப்பைப்பற்றியும் இப்படிச் சொல்லலாம். உங்களுக்கென்று பள்ளிக்கூடக் கட்டிடமுணடு; புத்தகங்களும், பல உபகரணங்களுமுண்டு. இவைகளிருந்தும் அவைகளை நன்கு உபயோகிக்க உங்களுக்கு நல்ல மனமில்லாவிட்டால் கல்வி பெறமாட்டீர்கள்.

காலையும், மாலையும் நாலுகட்டை நடந்தும், பின்னேரம் வீட்டிற் படிக்கவென்று புத்தகங்களை வீட்டுக்குச் சுமந்தும் செல்லும் பிள்ளையா, அல்லது பள்ளிக்கூடத்திற்கு அருகாமையிலிருந்தும் படிப்பைப்பற்றி அக்கரையற்று இருப்பவனு நல்ல கல்விமானுவான் ?

எல்லாம் இருந்தாலும் உங்கள் மனப்பக்குவமும் கட்டாயத் தேவை.

பொன்னிலும் பார்க்க நல்ல மனப்பக்குவம் விலையுயர்ந்தது. ஏனெனில், முந்தியது அதிஷ்டப்பொருள், பிந்தியதோ இயற்கைக்கொடை. சுபம் !

உங்கள் அன்புள்ள,
அண்ணு.

## எங்கள் துணை

"ஜெயம்"

தீர்க்கரும் மா துயர் மீறி — நீ
தியங்கிக் கலங்குகின் ருயோ ?
பாக்கியத் தாய்மரி யாட்குக் — கூறு
பாவியுனக் கருள் செய்வாள்

●

மாசற்ற தூய தீர்மானம் — செத்து
மடிவது போலுணர்ந் தாலும்
நேசத்தின் தாயவள் பாதம் — சென்று
நின்று திடம்பெறு வாயே

●

சின்னஞ்சிறு குறைகூட அது
சிரிப்புக் கிடந்தந்த போதும்
அன்னை யறிந்திடக் கூறு — உனை
அன்பொ டணைத்தருள் செய்வாள்

●

கேட்ட வரங்களே தேனும் — வந்து
கிடையாத போதினுங் கூறு [அன்னை
வாட்டந் தவிர்த்துனைக் காப்பாள் —
வண்மைக் களஞ்சிய மன்ரே ?

●

வாழ்க்கை இருளடைந் தாலும் — பெ
வாதைகள் நீசுமந் தாலும் [ரும்
மோட்சலங் காரியைக் கேளு — அவள்
முன்னிலை வந்திடர் தீர்ப்பாள்

●

நல்லகதி பெற வேண்டின் — ஆத்ம
நன்மைவரம் பெற வேண்டின்
சொல்லருந் தாய் துணை தேடி — ஓடிச்
சொல்லு சுகம்பெறு வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் சம்பூரண சமத்துவம்

யேசுக்கிறிஸ்துநாதர் இவ்வுலகத்துக்குவர அநேக நூற்றண்டுகளுக்கு முன் மோயீசன் என்ற ஒருவர் இருந்தார். மோயீசனுக்கு, இருகற்பலகைகளில் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகளைச் சருவேசுரன் கொடுத்தார். சருவேசுரன் மோயீசனைத் தெரியப்பட்ட சனங்களின் தலைவர் ஆக்கினர்.

மோயீசன் வாலிபனுய் இருக்கும்போது தன் நாட்டைவிட்டுப் பிறநாடு சென்று ஆட்டு மந்தைகளை மேய்ப்பவனுனர்.

ஒருநாள் கோரேபு என்னும் மலைச்சாரல் அடியில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் சமையம் சடுதியில் ஒரு பற்றையின் பக்கத்தில் நெருப்புப் பிரகாசம் தோன்றியது.

பற்றையோவெனில் எரியவில்லை. இக்காட்சியின் காரணம்யாது என அறிய மோயீசன் எத்தனித்தார்.

அப்பிரகாசத்தை நோக்கி நடக்கும்போது: "மோயீஸ்! மோயீஸ்!" என்று பற்றையின் அருகில் இருந்து ஒருசத்தம் பிறந்தது. மோயீசன், "நான் இங்கு நிற்கிறேன்" என்று விடைகொடுத்தார். அச்சத்தம் தொடர்ந்து: "நீ கிட்ட வராதே; இவ்விடம் பரிசுத்தமாய் இருப்பதால் உன்பாதரட்சைகளைக் கழற்றிவிடு" என்றது. மோயீசனுக்கு இவைகள் எல்லாம் ஓர் ஆச்சரியமாய் இருந்தது. என்ருலும், அசரீரிஇட்ட கட்டளைப்படி செய்தார்.

அச்சத்தம் தொடர்ந்து, "நாம் உங்கள் பிதாவின் தேவன், ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன்" என்று கூறியது. மோயீசன் தேவனைப்பார்க்கக் கூடாதவராய்த் தன்முகத்தை மறைத்துக்கொண்டார். அப்பொழுதுதேவன் அவரைப்பார்த்து: "உன் சொந்த நாட்டுக்குச் செல். என் மக்கள் அடிமைகளாய் இருக்கிறர்கள். அவர்களை அடிமையில் நின்று நீக்கி அவர்களைச் சொந்தத் தேசத்துக்குக் கூட்டிச்செல்" என்றார்.

மோயீசன் பயம் கொண்டார். ஏனெனில் தேவனுல் தெரியப்பட்ட மக்களை அடிமைகளாய் வைத்திருக்கும் அரசன் அஞ்ஞானியாய் இருந்தான். மேலும் தம்மைச் சருவேசுரன் இவர்களின் தலைவராக்கினர் என்பதைச் சனங்கள் நம்புவார்களோ என்றும் பயந்தார்.

"உன்னை அனுப்பினவர் யார்என்று சனங்கள் வினவினுல் யான் யாதுசொல்லுவேன்" என்ருர்மோயீசன். அதற்கு "நாமே நாம்" என்று அவர்களுக்குச் சொல்" என்று அக்குரல் கூறியது.

## கடவுள் யார்?

நாமேநாம் என்பது கடவுளின் பெயர். நாமேநாம் என்பதில் இருந்து கடவுளைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்ளலாம். இலகுவில் கடவுளைப்பற்றி விளங்கிக் கொள்ளுவது கஷ்டம். ஆனுல், ஆழமாய்ச் சிந்தித்தால் கடவுளைப்பற்றிச் சிறிது விளங்கிக்கொள்ளலாம்.

உதாரணமாக, நான் ஒருவனைப் பார்த்து: "நீ யார்" எனவினவ அவன் "நான் அன்ரன் யோண்" என்று மறுமொழி பகர்ந்தான். அப்பொழுது நான் அவனின் குடும்பப்பெயர் யோண்என்றும் அவன் தந்தைபெயர் யோண் என்றும் அறிந்துகொண்டேன்.

கடவுளும் "நாமே நாம்" என்று மோயீசனுக்குக் கூறியபொழுது தாம் நித்தியமாய் உள்ளவர்என்பதையே கருதினர். அவரை ஒருவரும் உண்டாக்கவில்லை. அவர் எப்பொழுதும் உள்ளவர். அவர் தாமாய் இருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எவ்வளவு ஆச்சரியமாய் இருக்கிறது. கொஞ்சம் ஆழ்ந்து யோசிப்போமாயின் இது எப்படி என்று அறிந்துகொள்ளலாம். உலகத்தில் உள்ள பொருட்கள் எல்லாம் கடவுளால் உண்டாக்கப்பட்டன. கடவுள் எல்லாப் படைப்புகளுக்கும் மேலானவர். அவருக்குச் சரியொத்தவர் ஒருவரும் இல்லை. அவர் எல்லாரிலும் மேலானவர். ஆதலால் அவர் தம்மிலேதாமே இருக்கிறார். இவைகளைத் தவிர அவரே சொல்லி இருக்கிறார். நாம் அவர்சொல்லை விசுவசிக்கிறோம்.

சருவேசுரன் எல்லாத்துக்கும் மேலானவராய் இருப்பதால் சருவேசுரன் ஒருவராய் இருக்கிறார். உலகத்தில் அதிக உயர்ந்தமலை எது? அதி நீளமான ஆறு எது? அதி பெரிய வாவி எது? எனவினுவினல் அதற்கு மறுமொழி ஒருமலை, ஒருஆறு, ஒருவாவியாகவே இருக்கும். அதுபோன்றே கடவுளும் ஒருவரே ஒருவர்.

## சருவேசுரன் ஓர் அரூபி

மோயீசன் முட்செடி அடியில் தம் முகத்தை மறைத்தார் என்று முன் வாசித்தீர்கள். ஏனெனில், சருவேசுரனை அவர் பார்க்கமுடியவில்லை. மோயீசன் அவரைப் பார்க்கத் தெண்டித்து இருந்தாலும் தேவனைக் கண்டிருக்கமாட்டார். ஏன் என்று உங்களுக்குத்தெரியுமா? சருவேசுரன் அரூபி. அவருக்கு எம்மைப்போல் சரீரம் இல்லை. இவ்வுலகில் அரூபியை நாம் காணமுடியாது. மோட்சத்தில்தான் சருவேசுரனை நாம்பார்க்க முடியும். அரூபிக்குச் சரீரம் இல்லாவிடினும் அரூபி உண்டு என்பதைமறவாதீர்கள். உதாரணமாக, நீங்கள் காற்றையே, அன்றேல் மின்சாரத்தையே கண்ணால் காண்பதில்லை. இருந்தும், இவைகள் உண்டு என்று நீங்கள் அறிவீர்கள். காற்றானது குழைகொம்புகளை அசையச்செய்கின்றது. மின்சாரம் வெளிச்சத்தைக் கொடுக்கிறது; மோட்டார் இரதத்தை ஓடச்செய்கிறது. இவ்வாறாக நீங்கள் காற்றுச்செய்யும் வேலைகளையும், மின்சாரம் செய்யும் தொழில்களையும் அறிவீர்கள்.

இதேபோன்று கடவுளை அவரின் செயல்களினால் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, றொபின்சன் குறுசோ என்பவர் கடல்ஆபத்துக்குள்ளாகி ஒரு மரத்துண்டை உதவியாய்க் கொண்டு ஒருபாலவனத் தீவை அடைந்தார். அத்தீவின் மணல்வெளியில் மனிதரின் அடி அடையாளங்களைக் கண்டார். றொபின்சன் ஒருவரையும் காணவில்லை. ஆனால், அடிச்சுவடுகளினால் அங்கு மனிதர்சீவிப்பதை அறிந்துகொண்டார்.

சருவேசுரன் படைத்த அதிசயப் பொருட்களையும், பெரும்படைப்புக்களையும் நாம் அவதானிப்போமானால் சருவேசுரனைப்பற்றி அறிந்துகொள்ளலாம்.

இவைகள்மூலம் அன்றியும், தேவன் எமக்குச் சொன்னவைகள் மூலமாயும் அவரை அறிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

---

# முளையிலே தேவதொண்டு

தேவஅழைத்தலுக்காகச் செபிக்கும் இந்நாட்களில் வாலரின் தோழரும், அநேக குருக்களை யாக்கியவருமான தொன்போஸ்கோவை நினையாமலிருக்க முடியாது.

தொன்போஸ்கோ ஐந்துவயதுச்சிறுவனாயிருக்கும்போதே வேத சத்தியங்களை ஆவலாய்க்கேட்பார். மூறியால்டோ விசாரணைக்குரு படிப்பித்த ஞானோபதேசத்தை யாவரும் வியக்கத்தக்கவிதமாய் மற்றச்சிறுவருக்குப் படிப்பிப்பார். அவருடையதாய் மாகிறேற்அம்மா வியாதிக்காரரைச் சந்திக்கப்போகும் பொழுது அவரையுங்கூடத் தம்முடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச்சென்று, பிறர்சிநேக ஊழியத்தைப் படிப்பித்தார்.

ஒன்பது வயதினராயிருக்கும்போது அவர்கண்டகாட்சி பிறருக்காக உழைத்து நன்மைசெய்யும் நற்குணத்தை அவரிடம் இன்னுமதிகம் வளரச் செய்தது.

சிறுவரைத் தம் வீட்டின் முற்றத்தில் ஒருங்கு கூட்டுவார். பெரியவர்களுங் கூடச்சேருவர். தம்முடைய ஜாலவித்தை செப்படிவித்தைகளால் எல்லார் மனதையுங் கவர்ந்துகொள்வார். வித்தைகள் ஆட்டங்கள் முடிந்ததும் அவருடைய ஏவுதலின்பேரில் எல்லோருஞ் செபிப்பார்கள். அதன்பின் ஞாயிற்றுக்கிழமை கோயிலிற்கேட்ட பிரசங்கத்தை அப்படியே கூறுவார்.

சனங்களைக் கோயிலுக்குப் போக விடாமல் தடுக்கும் மாயவித்தைக்காரரைத் தடைசெய்வதில் வெகுசாமர்த்தியங்காட்டுவார். இந்த ஆடல்பாடல்களைத் தடுகக வெகுபிரயாசப் படுவார். எல்லாரும் அவர்சொல்லைக் கேட்கமாட்டார்கள்; அவரைப் பரிகாசஞ்செய்வார்கள். வேடிக்கைகாரர் அவருக்குத் தீங்கு செய்ய எத்தனிப்பார்கள்.

அப்பொழுது அவர் தமது குறும்புத்தனத்தைக் காண்பிப்பார். அதாவது, தமது குயிலினுமினிய குரலிற் பாடுவார். அதைககேட்ட சனங்கள் பாட்டிலே லயித்து மெய்மறந்துபோவார்கள். பின்பு அவர்களைக் கோயிலுக்குக் கூட்டிச் செல்வார்; அல்லது தத்தம் வீடுகளுக்குப் போகச்செய்வார்.

மொன்குக்கோ கிராமத்தில் தொன்போஸ்கோவின் "ஒறறொறி" என்னும் சிறுவர் கூட்டம் முதல் ஆரம்பமானது. கியேரியில் சாப்பாட்டுக்கடையில் நின்றபொழுது தேவதூஷணம் பேசுகிறவர்களைக் கடிந்து தடுப்பார். அங்குதான் யூதகுலத்துக்குச்சேர்ந்த உடன்மாணவனொருவனையும் மனந்திருப்பினர்.

தொன்போஸ்கோவின் ஆத்தும வாஞ்சை பின்பற்றத் தக்கது.

---

## விநோத படைப்பு

தம்பி, தங்கையரே உமது வாழ்க்கையில் எத்தனையோ விநோதங்களைக் கண்டிருப்பீர்கள். ஆனால், நான் இங்கு கூறப்போகும் ஓர் விநோதபடைப்பைக் கவனித்துக் கேளுங்கள்.

கடவுள் உலகத்தை உண்டாக்கினர். சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை உண்டாக்கினர். இவ்வாறு உண்டாக்கப்பட்ட சூரியகுடும்பத்தில் வால்நட்சத்திரம் ஓர் விநோதமானது. இந்நட்சத்திரம் மற்றைய கிரகங்களைப்போல் சூரியனை வட்டவடிவமாகச் சுற்றிவராது சாய்வளைவடிவாக (எலிப்சுவடிவாக) ச் சுற்றிவருகின்றது. வால் நட்சத்திரங்கள் பலஇருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆனால், இவற்றுள் அதிவிநோதமான நட்சத்திரம் ஹாலி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டமையால் இதற்கு, "ஹாலிஸ் வால்நட்சத்திரம்" எனப் பெயர் வந்தது இவர் இதன்பாதையையும், போக்கையும் கணக்கிட்டு 75 வருடங்கட்கொருமுறைதான் தோன்றுமென்று கணக்கிட்டிருக்கின்றார்.

இவர் கணக்கிடடுககூறியபடி 1910-ம் ஆண்டில் இந்நட்சத்திரம் தோன்றியது. திரும்பவும் 1986-ம் ஆண்டு தென்படும் அப்போது நீங்களும் பார்த்து அறிந்து கொள்ளலாம். இந்நட்சத்திரம் மற்றையனவைப்போல் பிரகாசிக்கும். ஆனல், புள்ளிபோல் தென்படாது. இதற்கு ஒளிமிகுந்த தலையும், ஒளிவீசும் நீண்டவாலும் உண்டு.

தம்பி, தங்கையரே இதை மனதுள் வைத்து 1986-ம் ஆண்டு இவ்விநோத நட்சத்திரத்தைக் கண்டுகளித்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org